# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 35 | ஜூலை-24-1968 | பக்கங்கள் 12 | விலை சதம் 15


சாதிப் பிரச்சினை ஒரு வர்க்கப் பிரச்சினையே

# தீண்டாமை ஒழிந்தேயாக வேண்டும்

**வட - இலங்கையில் இன்று தீண்டாமைக்கெதிராகவும், சாதிக் கொடுமைக்கெதிராகவும் தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தி வருகின்ற போராட்டம், இலங்கையின் சகல பாகங்களிலுமுள்ள நல்லெண்ணம் கொண்ட சகல மக்களினாலும் ஒருவித தயக்கமுமின்றி உறுதியுடன் ஆதரிக்கப்படவேண்டும்**

சாதி அமைப்பு முறை நிலப்பிரபுத்துவ பழங்கால அமைப்பிலிருந்து எம்மைப் பீடித்துள்ள ஓர் அவமானச் சின்னமாகும். தென்னிலங்கையிலும் கூட அது, சில உருவங்களில் நிலவி வருகிறது. ஆனால் வட இலங்கையிலுள்ளது போல் சாதிக் கொடுமை வேறு பகுதிகளில் இல்லை. நாம் பல தடவை சுட்டிக்காட்டியுள்ளதைப் போல், வாழ்க்கையின் சகல துறைகளிலும் இத்தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்சாதியினருடன் எந்தவித சமூக சமத்துவமும் இல்லாதவர்களாய் இருக்கின்றனர். உயர்சாதியினரின் வீடுகளுக்குள்ளே அவர்கள் போக முடியாது. தேநீர் கடைகளுக்குள்ளோ, ஹோட்டல்களுக்குள்ளோ அவர்கள் செல்ல முடியாது. உயர் சாதியினரின் பிள்ளைகள் படிக்கின்ற நல்ல பள்ளிக்கூடங்களில் இவர்களின் பிள்ளைகளுக்கு இடமில்லை. தாகமெடுத்தால், ஒரே கிணற்றில் தண்ணீர் அள்ளக் கூட இவர்களுக்கு உரிமை இல்லை.

இன்று மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமான இம்மனிதர்கள், எல்லோருக்கும் பொதுவான ஒரு தெய்வத்தை வணங்குவதற்குக் கூட ஆலயத்திற்குள் போக முடியாதபடி தடுக்கப்படுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகிறன.

யாழ்ப்பாணத்தில் நிலவி வருகின்ற சாதி அடக்குமுறையின் படுகேவலமான அம்சம் தான் தீண்டாமை. உண்மையிலேயே தீண்டாமைதான் மனிதன் மனிதனைக் கேவலப்படுத்துவதில் மிகவும் இழிவான தொன்றாகும், விஞ்ஞானம் அபிவிருத்தியடைந்துள்ள கட்டத்தில்—மனித வர்க்கம் ஒரு புதிய சகாப்தத்தை நோக்கிச் செல்லும் கட்டத்தில்—உலக ஏகாதிபத்தியம் சுடுகாட்டை நோக்கி இழுத்துச் செல்லப்படும் கட்டத்தில்—சோஷலிஸம் வெற்றிப் பாதையில் உலக ரீதியாக முன்னேறிவரும் கட்டத்தில்—1968-ம் ஆண்டில் இப்பேர்ப்பட்ட அநியாயம் நடக்க விடுவது இலங்கை முழுவதற்குமே பெரும் அவமானமாகும்.

இந்தப் பிரச்சினையைக் கையாள்வதில் இவ்வளவு சோம்

— 12-ம் பக்கம் பார்க்க

## வீரமிக்க வியட்நாம் மக்களுக்கு





எமது புரட்சிகர வாழ்த்துக்கள்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அஞ்சா நெஞ்சுடன் எதிர்த்துப் போராடும் வியட்நாம் மக்களின் வீரச் செழுமையை எடுத்துக் காட்டும் ஓவியம்

### வியட்நாமுக்கு ஆதரவு

வியட்நாமுக்கான ஜெனிவா ஒப்பந்தத்தின் 14-வது ஆண்டு நிறைவை ஒட்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சென்ற 20-ந் தேதி வியட்நாம் மக்களை ஆதரித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும், கூட்டமும் நடத்தியது.

-விபரம் 11-ம் பக்கம்



## தென் வியட்நாம் மக்களுக்கு தோழர் மா ஓ வின் வாழ்த்துச் செய்தி

தென் வியட்நாம் தேசிய விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்டு ஏழாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் இவ் வேளையில், சீன மக்களின் சார்பில், போராடும் தென் வியட்நாம் மக்களுக்கு எனது இதய பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீங்கள் திறமை மிக்க போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளீர்கள். மிக கஷ்டமான சூழ்நிலையில், உங்கள் பலத்திலேயே தங்கி, உலகில் மிகக் கொடூரமான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளை தப்ப முடியாதவாறு அடித்து விட்டீர்கள். இது ஒரு மகத்தான வெற்றி. சீன மக்கள் உங்களுக்கு தலைவணங்குகிறார்கள்.

ஒரு நாடு பெரிதோ அல்லது சிறிதோ, அந் நாட்டு மக்களை தட்டி எழுப்பி, அவர்களில் திடமான நம்பிக்கை வைத்து, மக்கள் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தால், எவ்வளவு பலம் வாய்ந்த எதிரியையும் தோற்கடிக்க முடியுமென்பதை உங்கள் வெற்றி மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளது.

மாபெரும் வழிகாட்டி தலைவர் ஹோ சி மின் அவர்களின் அறிவுபூர்வமான தலைமையின் கீழ், அமெரிக்க ஆக்கிரமிப்புக்கெதிராகவும், தேசிய விடுதலைக்காகவும், வியட்நாம் மக்கள் நடத்தும் போராட்டம், உலகெங்குமுள்ள ஒடுக்கப்பட்ட இனங்களுக்கும், அவர்களின் விடுதலைக்கான போராட்டத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் துலங்குகிறது.

அமெரிக்க ஆக்கிரமிப்பாளர் வியட்நாமில் இருக்கப் போகும் நாட்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவை. ஆனாலும் அழிவின் இறுதிக் கட்டத்தில் உள்ள எல்லா பிற்போக்கு சக்திகளும் தங்களது அழிவுப் போராட்டத்தை நடத்துகின்றன. தங்கள் வெளியேற்றத்தில் இருந்து தப்புவதற்காக இராணுவ தாக்குதலைக் கடைப்பிடிப்பார்கள்; எல்லா விதமான அரசியல் மயக்கத்தையும் உண்டாக்குவார்கள். இறுதி வெற்றிக்கு முன் புரட்சிகர மக்கள் பலவிதமான கஷ்டங்களுக்கும் உள்ளாக்கப் படுவார்கள். எப்படியென்றாலும் இக் கஷ்டங்களைக் கடக்க வேண்டும். எந்தக் கஷ்டங்களும் புரட்சியின் விரிவைத் தடை செய்ய முடியாது. மன உறுதி என்றால் வெற்றியே. இந் நீண்ட கால யுத்தத்தில், மன உறுதியுடன் போராடும் வியட்நாம் மக்கள் நிச்சயமாக அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை விரட்டுவார்கள் என்பதில் எனக்கு ஆழமான நம்பிக்கை உண்டு.

நாங்கள் உறுதியாக உங்களை ஆதரிக்கிறோம். பல்லும் சொண்டும் போல் உள்ள, அயல் நாட்டவர் நாம். எங்கள் இரு மக்களும், இன்பதுன்பத்தில் பங்கு கொள்ளும் சகோதரர்கள். உங்கள் போராட்டம் எங்கள் போராட்டம் என்பதை, சகோதரத்துவ தென் வியட்நாமிய மக்களும், சகோதரத்துவ முழு வியட்நாமிய மக்களும் நம்பியிருக்கலாம். 70 கோடி சீன மக்கள், வியட்நாம் மக்களுக்கு சக்தி வாய்ந்த ஆதரவு அளிக்கிறார்கள். பரந்த சீனு அவர்களின் நம்பிக்கையான பின் தளமாகும் எங்கள் இரு தேச மக்களின் திட்டமான புரட்சிகர ஒற்றுமையின் முன் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் இராணுவத் தாக்கமும் அரசியல் போலிகளும் தோல்வியுறும்.

**வெற்றி நிச்சயமாக வீர வியட்நாம் மக்களுக்கே!**

# சோவியத் யுத்தக் கப்பல் இலங்கைக்கு வந்தது ஏன்?

கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த சோவியத் போர்க்கப்பல்களின் துப்பாக்கிக் குழாய்களிலிருந்து வெளிவந்த குண்டுகள் இந்தப் பிரதேசத்தையே சூழ்ந்து கொண்டிருந்த போது கொழும்புக்கும் மாஸ்கோவுக்கும் ரெலிபோன் தொடர்புகள் ஏற்பட்டமை ஆசியாவின் வளர்ந்து வரும் நாடுகள் சம்பந்தமாக ரஷியா கடைபிடிக்கும் மாறுபட்ட கொள்கைகளை எடுத்துக் காட்டியது.

1917ம் ஆண்டின் மாபெரும் ரஷியப்புரட்சிக்குப் பின் முதன் முதலாகக் கொழும்புத் துறை முகத்துக்கு வந்திருந்த இப் போர்க் கப்பல்களின் தலைவரான ரியல் அட்மிரல் ஒருவர் முற்று முழுதான மேற்கத்திய பாணியில் ராணி மாளிகைக்கும், அலரி மாளிகைக்குஞ் சென்று அங்குள்ள விருந்தாளிகள் புத்தகங்களில் கையெழுத்திட்டார். அதே நேரம் வர்த்தக அமைச்சின் ஓர் உயர்தர அதிகாரி, ரஷியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தகக் கடன்களில் மேலதிகமாக இன்னும் இருபது லட்ச ரூபாவைக் கட்டுமாறு ரஷியா இலங்கையைக் கேட்டதற் கெதிராக மாஸ்கோவுக்கு அனுப்புவதற்கு ஒரு கடிதத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தார். இரண்டு மாதங்களுக்கு முன் ரஷ்யா இதே விதமான ஒரு ஆயுத ''விளையாட்டைக்'' காட்டி இலங்கையிடமிருந்து ஐம்பது லட்ச ரூபாய்களைப் பெற முயற்சி செய்தது.

இதோடு, சோவியத் ரஷிய யுத்தக் கப்பல்கள் இந்து மகா சமுத்திரத்தில் தளமில்லாமலேயே வந்தடைந்ததும், சீனுவுக்கெதிராக ''நாடாசை பிடித்த நாடு'' என்று பொய்ப் பிரச்சாரத்தை ரஷியா மும்முரமாகக் கையாள்வதும் கவனிக்கத் தக்கவை.

சோவியத் கப்பல்கள் வருகை தந்த அதே தினத்தில், இலங்கையின் திரிபுவாதக் கும்பலினுல் மக்கள் சீனத்தின் மாபெரும் தலைவர், இன்றைய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் தோழர் மா சே-துங்கிற்கு எதிரான பொய்ச் செய்திகள் அடங்கிய வெகு கேவலத்துக்குரிய ஒரு சிறு புத்தகம் சகல புத்தகக் கடைகளுக்கும் விநியோகிக்கப் பட்டது. ''கடதாசிப் புலி'' என்ற பொய்ப் பெயரில் இதை எழுதியுள்ள இதன் ஆசிரியர் சோவியத் ரஷியாவுக்காக பணம் கொடுத்து வாங்கப் பட்ட, பத்திரிகை விபச்சாரம் நடத்தும் ஒருவராகும்.

இரகசியச் செய்திகளின் மூலம் சோவியத் ரஷியா இனி இலங்கை சம்பந்தமாக எடுக்கப் போகும் பல வித நடவடிக்கைகள் பற்றி பல விஷயங்கள் வெளி வந்திருக்கின்றன.

எமது நாட்டுக் கடற் பிராந்தியத்தில் சோவியத் ரஷியாவின் பலத்தைக்காட்ட எடுத்த இந்த முயற்சியும், சீனுவுக்கு எதிராக நடத்தப்படும் இந்தப் படு கேவலமான பிரச்சாரமும் இன்று மக்கள் சீனத்துக்கும் இலங்கைக்கும் இடையில் இருக்கும் அரசியல், பொருளாதார, கலாச்சார, வர்த்தக நெருக்கங்களை உடைத்தெறிய எடுத்துள்ள முயற்சிகளாகும்.

இலங்கைக்கு வந்துள்ள ரஷிய வர்த்தகத் ''தூதுக் குழு'' இலங்கை அரசாங்கத்தை பலாத்காரமாக இரண்டு வருட வர்த்தக ஒப்பந்தத்துக்கு இணங்க வைப்பதன் மூலம் சீன இலங்கை வர்த்தகத்தை உடைத்தெறிய முயற்சி செய்கின்றது. இதன் ஒரு நடவடிக்கையாக இலங்கைக்கும் ரஷியாவுக்குமிடையிலான இது கால வரைக்குமுள்ள வர்த்தகக் கடன் சம்பந்தமாக பெருமளவில் சீட் ரப்பரை இலங்கையிலிருந்து பெற ரஷியா முயற்சிப்பதும் ஒன்றாகும்.

எனினும் எமக்குக் கிடைத்துள்ள செய்திகளின் படி அவர்களின் அந்த முயற்சி பலனளிக்கப் போவதில்லை எனத் தெரிகிறது. சீனுவுக்கும் எமது நாட்டிற்குமிடையிலான வர்த்தகத்தைத் துண்டித்துக் கொள்ள நாம் தயாராக இல்லை என இலங்கை அரசாங்கம் திரிபுவாத ரஷிய ஆட்சிக்குத் தெரிவித்துள்ளதாகத்தெரிகின்றது. அதற்குப் பதிலாக இந் நாட்டின் வேறு உற்பத்திப் பொருட்களை விசேஷமாகத் தேயிலையை விலை கொடுத்து எடுக்க வேண்டும் என யோசனை கூறப்பட்டுள்ளதாம்.

சீட் ரப்பர் சம்பந்தமான ரஷியாவின் தேவையை, சீனுவுக் கிடையிலான அரிசி ரப்பர் ஒப்பந்தப்படி சீனுவுக்குரிய ரப்பரைக் கொடுத்து மீதியிருப்பதைத் தான் கொடுத்துப் பூர்த்தி செய்ய முடியும். சீனு இலங்கையுடனான வர்த்தக ஒப்பந்தத்தை எது விதத்திலும் முறித்துக் கொள்ளப் போவதற்கான எந்த வித அறிகுறியும் இல்லை.

சீனுவிலிருந்து வர வேண்டிய அரிசி குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரேயே வந்துள்ளதுடன் அது சம்பந்தமான கொடுக்கல் வாங்கலும் சரியாக முடிந்துள்ளன. இது விதமாக திரிபுவாதிகளின், சீன இலங்கை நல்லுறவைப் பாதிக்க எடுத்த இன்னொரு முயற்சியும் தோல்வியடைந்துள்ளது.

## அமெரிக்காவில் பஞ்சம்

அமெரிக்கா செல்வம் கொழிக்கும் நாடு, சொர்க்க பூமி என்று ஏகாதிபத்தியவாதிகளாலும், பிற்போக்கு வாதிகளாலும் வர்ணிக்கப்படும் பொழுது அந்நாட்டில் பஞ்சம் என்றால் யார்தான் நம்புவார்கள். ஆனால், உண்மையில் அங்கு பஞ்சம் தலை விரித்தாடுகின்றது. இதோ விபரங்கள்:

அமெரிக்காவில் 1 கோடி மக்களுக்கு மேல் பட்டினியால் வாடி வதங்குகின்றனர்.

20 மாகாணங்களில் 280 மாவட்டங்களுக்கு மேல் பஞ்சப் பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

அதிக செல்வந்த நகரமென்று கூறப்படும் நியூயோர்க்கின் வெஸ்செஸ்ரர் மாவட்டத்தின் 2 லட்சத்து 12 ஆயிரம் குடும்பங்களில் 44 ஆயிரம் குடுப்பங்கள் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகிச் செத்து மடிந்து கொண்டிருக்கின்றன.

தென் அமெரிக்காவில் 1940 திலிருந்து 40 லட்சம் நீக்ரோக்களும் எண்ணற்ற வெள்ளை நிறத்தவர்களும் பஞ்சத்தினுல் பாதிக்கப்பட்டு வடக்கிலும், மேற்கிலுமுள்ள தலைநகரங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றிருக்கின்றார்கள். இது மாத்திரமா?

கிட்டத்தட்ட 3 கோடி அமெரிக்கர்கள் தங்கள் சுற்றுப்புறத்திலுள்ள செல்வங்களை தமது சொந்த உடமையாக வைத்திருக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள மூன்றிலொரு குடும்பங்கள் சொந்த வீடில்லாமல் திண்டாடுகின்றன.

அதே நேரத்தில் 150 கோடீஸ்வரர்கள் தலைக்கு 20 ஆயிரம் கோடி டாலர்கள் பெறுமதியுள்ள உடமைகளைச் சொந்தமாக வைத்திருக்கின்றார்கள். எப்படி அமெரிக்க சுதந்திரத்தின் லட்சணம்?


(மே 17, 1968 அமெரிக்க ''டைம்ஸ்'' சஞ்சிகையிலிருந்து எடுக்கப்பட்டது.)

**அறிவித்தல்**

**சி. டி. யு. எப். பின் புதிய தொலைபேசி எண்**

**20365**

# மலையகத்து வாலிபர் மாநாடு



பாராளுமன்ற உறுப்பினரான எஸ். டி. பண்டாரநாயக்கா மாநாட்டில் உரையாற்றுகிறார்.

ஜூலை மாதம் 19ம்திகதி அட்டன் பிரின்ஸ் படமாளிகை மண்டபத்தில் மலைநாட்டுப் பிரதேசத்திலுள்ள செங்கொடி வாலிபர் சங்கங்களின் மகாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது. இம்மகாநாடு ஒரு ''மாசே துங் சிந்தனைப் பாடசாலை'' போல் அமைந்தது. மழை பொழிந்து கொண்டிருந்த பொழுதிலும் 1200க்கும்

இளைஞர்களாகிய நீங்கள் உத்வேகமும் ஜீவசக்தியும் நிறைந்தவர்கள். வாழ்வின் ஆரம்பத்தில் இருக்கின்றீர்கள். காலை எட்டு, அல்லது ஒன்பது மணியளவில் காணும் சூரியன் போல் இருக்கின்றீர்கள். நம்பிக்கை முழுவதும் உங்கள் மேல் வைக்கப்பட்டிருக்கின்றது...

மார்க்சிஸம் ஆயிரம் ஆயிரம் உண்மைகளை உள்ளடக்

யில் இதுதான் முதல் தடவை. இந்த நிகழ்ச்சி வருங்காலத்துக்கு நல்லதோர் வழிகாட்டியாகும். இந்திய வம்சாவழி வாலிபத் தொழிலாளர்கள் நடத்திய ஒகு மகா நாட்டில் இது நடைபெற்றது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். தொண்டமானினதும், அசீஸினதும் காலம் மலை ஏறிவிட்டது என்பதை இந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது. மகாத்மா காந்திக்கு ஜே! நேருவுக்கு ஜே! என்ற கோஷங்கள் போடும் காலம் மலை ஏறிவிட்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

இன்று தோட்டங்களிலே பிச்சைக் காசுக்காக நெற்றி வியர்வை சிந்தும் இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள், அரசியல் உரிமைகள் ஏதுமற்ற தொழிலாளர்கள் முதலாளி

ரூர். இது வரை காலமும் மலைநாடெல்லாம் தேயிலைச் செடிகளின் பச்சை நிறமாகவே தோற்றமளித்தன. இன்று அங்கு நிறம் மாறிச் காட்சியளிக்கின்றது. நூற்றுக் கணக்கான செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன. ஆயிரக்கணக்கான செஞ் சட்டைகளை ஆண்களும் பெண்களும் தரித்து நிற்கின்றனர், மலைநாடெல்லாம் செந் நிறமாய்க் காட்சி தருகின்றது; இது பெரியதொரு வெற்றி.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் கணிசமான பகுதியினரான இந்த நாட்டின் செல்வத்தின் பெரும் பகுதியை உற்பத்தி செய்கின்ற மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்கள் தொண்டமானினதும், அசீஸி

உரிமைகள் கூடப் பறித்தெடுக்கப்பட்டன. அது மட்டுமல்லாது இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தில் மிகக் குறைந்த ஊதியம் பெறுபவர்களாகவும் இவர்கள் இருக்கின்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான செங் கொடிச் சங்கம் (இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்)தோன்றி வளர்ந்த பின்தான் தோட்டத் தொழிலாளர்களுக்குப் புரட்சிகரத் தலைமை கிட்டியது. புரட்சிகர போராட்டம் இல்லாமல் தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம் இல்லை என்பதையும் அப்பேர்ப்பட்ட போராட்டத்துக்கு இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் மத்தியிலும் சிங்களத் தொழிலாளர்கள் மத்தியிலும் சிங்கள விவசாயிகள் மத்தியிலும் உள்ள புரட்சிகர சக்திகளின் இடையில் புரட்சிகர ஐக்கியம் அவசியம் என்பதனையும் இப்போதுதான் தோட்டத் தொழிலாளர்கள் உணரத் தொடங்கியுள்ளனர், என்று தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், ''தோட்டத்தொழிலாளர்களை வெளிநாட்டு உள்நாட்டு முதலாளி வர்க்கத்தினர் மிருகத்தனமாகச் சுரண்டி வந்ததற்குக் காரணம் அவர்களுக்குப்

# ஒரு மாசே-துங் சிந்தனைப் பாடசாலை

மேற்பட்ட பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் செஞ் சட்டை அணிந்தவர்களாய் மாசே - துங் பதக்கங்களை அணிந்தவர்களாய் பங்கு கொண்டனர். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களான தோழர்கள் என். சண்முகதாதாசன், எஸ், டி. பண்டாரநாயகா, எம். சி. எம். ஷாபி ஆகியோரும் மற்றோரும் மேடைச்கு வந்தபோது சபையிலிருந்தவர்கள் பலத்த கரகோஷத்துடன் வரவேற்றனர்.

## மாசே - துங் மேற்கோள்களுடன் மகாநாடு ஆரம்பம்

மகாநாட்டின் ஆரம்பத்தில் சபையில் குழுமி இருந்த அனைவரும் மாசே - துங்கின் மூன்று மேற்கோள்களை ஒன்றுகச் சேர்ந்து உச்சரித்தனர். அவையாவன:

''உலகம் உங்களுடையது. அதுபோல் எங்களுடையதுமாகும். ஆனுல் இறுதியாக ஆராய்ந்து பார்த்தால் அது உங்களுடையதுதான்.

கியது. ஆனுல் அவையனைத்தையும் ஒரு வார்த்தையில் தொகுத்துக் கூறினுல் ''கிளர்ச்சி செய்வது சரி.'' ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அடக்கியொடுக்குவது சரி, சுரண்டுவது சரி, கிளர்ச்சி செய்வது பிழை என்று சொல்லப்பட்டு வந்தது. மார்க்சிஸம் தோன்றிய பின்னர் தான் இந்தப் பழைய தீர்ப்பு மாற்றப்பட்டது. இது ஒரு பெரும் சாதனை. போராட்டத்தின் மூலம் தான் பாட்டாளி வர்க்கம் இந்த உண்மையை உணர்ந்தது. மார்க்ஸ் அவர்கள் மேற்படி முடிவைத் தொகுத்தார். இந்த உண்மையிலிருந்து எதிர்ப்பு, போராட்டம், சோஷலிஸத்துக்கான போர் ஆகியவை எழுகின்றன..........

மக்கள் படையொன்று இல்லாவிட்டால் மக்களுக்கு ஒன்றுமே இல்லை.''

## தொண்டமான்-அசீஸ்காலம் மலையேறிவிட்டது

மா சே-துங் சிந்தனையை வாசிப்பதுடன்மகாநாடொன்று ஆரம்பிக்கப்படுவது இலங்கை

வர்க்கம் ஒழிக! தொழிலாளி வர்க்கம் வாழ்க! என்ற புரட்சிகரக் கோஷங்களிடத் தொடங்கி விட்டனர். இவர்கள் இனிமேலும் இந்திப் மூவர்ணக் கொடியைத் தூக்கிய பிடிக்க மாட்டார்கள். புரட்சியின் செங் கொடியையே உயர்த்திப் பிடிக்கின்றனர். காந்திக்கும் நேருவுக்கும் புகழ்பாடுவதை நிறுத்தி விட்டனர். இன்று எமது சகாப்தத்தின் தலைசிறந்த மார்க்கிஸ்ட்—லெனினிஸ்டான சர்வதேசீய பாட்டாளி வர்க்கத்தின் தலைவரான தோழர் மா சே-துங் வாழ்க எனக் கோஷமிடுகின்றனர். தமது ஊர்வலங்களின் முன்னிலையில் தலைவர் மா ஓ அவர்களின் படத்தைக் கொண்டு செல்கின்றனர். சரித்திரத்தில் ஓர் திருப்பு முனை. முற்போக்குவாதிகள் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தோழர் சண பேச்சு மலைநாடு செந்நிறமடைகிறது

மகா நாட்டுக்குத் தலைமை தாங்கிய தோழர் ஓ. ஏ. இராமையா அவர்கள் பிரதிநிதிகளையும் பார்வையாளர்களையும் வரவேற்றுர். கூட்டத்துக்குச் சமூகந் தந்திருந்த முக்கியஸ்தர்களுக்கு நன்றி கூறினுர். மகா நாட்டின் நோக்கங்களை எடுத்துரைத்தார். தோழர் ஏ. ஆர். எட்மண்ட் அவர்கள் இலங்கை வாலிபர் சங்கங்களின் சம்மேளனத்தின் சார்பில் மகா நாட்டிற்கு ஆசியுரை வழங்கினுர்.

அவரைத் தொடர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் சொற்பெருக் காற்றுகையில் மகாநாட்டின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கினுர். உலகத்தின் மேலே வீசுகின்ற புரட்சிப் புயல் மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்கள் மேலும் வீசத் தொடங்கிவிட்டது என்

னதும் பிற்போக்கான வகுப்புவாதத் தலைமையினுல் தவறுதலான பயனற்ற வழியில் நடத்திச் செல்லப்பட்டனர். தனித்தனிச் சங்கங்களின் பின்னுல் அடைத்து வைக்கப்பட்ட



தலைவர் மாசே - துங்கின் மூன்று மேற்கோள்களை வாசித்தலுடன் மாநாடு ஆரம்பமாகியது. மேடையிலிருந்த தலைமைத் தோழர்கள் மேற்கோள்களை வாசித்துக் கொண்டிருப்பதைப் படம் காட்டுகிறது. மேடை மேல் இருப்பவர்கள் ரொசாரியோ பெரனுண்டோ, எஸ். டி. பண்டாரநாயக்கா, என். சண்முகதாசன், ஓ; ஏ. ராமையா, வீ. கந்தசாமி ஆவர்.

னர். சிங்கள மக்கள் மத்தியிலுள்ள முற்போக்குத் தொழிற் சங்க இயக்கத்துடன் ஒன்றிணைய முடியாது தடுக்கப்பட்டனர்.

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிகரத் தலைமை

கடந்த காலங்களில் எல்லாம் இத்தலைவர்கள் இத்தொழிலாளர்களின் அரசியல் கோரிக்கைகளுக்காகவோ, பொருளாதாரக் கோரிக்கைகளுக்காகவோ எந்த விதமான புரட்சிகரப் போராட்டங்களையும் ஒழுங்கு செய்யவில்லை. மாறுக அவர்களுக்கு இருந்த ஒரு சில அரசியல்

(முதலாளிகளுக்கு) பக்க பலமாக ஏகாதிபத்திய முதலாத்துவ அரசு யந்திரம் முதலாளி வர்க்கத்தின் காவல் நாய்களான பொலிஸ் படையின் உருவத்திலும் இராணுவத்தின் உருவத்திலும் இருந்து வருவதேயாகும். இந்த சக்திகள் இல்லாமல் தோட்டத் துரை தொலை பேசியைத் தூக்கியதும் ஜீப்புகளில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் ஓடோடியும் வராவிட்டால் இந்த விதமான சுரண்டல் தொடர்ந்தும் நடைபெற முடியாது.

ஆதலினுல் தான் தொழிலாளி வர்க்கத்திற்கு விமோசனம் வெறும் வாய்ப்பந்தல்

11-ம் பக்கம் பார்க்க



மண்டபத்தின் ஒவ்வொரு சிறு இடத்தையும் நிரப்புமாறு குழுமியிருந்த வாலிப முன்னணியினரின் கூட்டத்தின் ஒரு பிரிவினர்.

நம்மைச் சுற்றி — நவம்

# தமிழ்த் தலைவர்களின் சொல்லைக் கேட்டதால் வந்த ஆபத்து

இன்று, அரசகரும மொழியாகிய சிங்களத்தில் போதிய தேர்ச்சி பெறுததன் காரணமாக மூவாயிரம் தமிழ் ஊழியர்கள் வரை பதவி இழக்கும் ஆபத்திற்குள்ளாகி யிருக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு அனுதையாவதற்குக் காரணம் மாவட்டசபை புகழ் ஃபாதர் செல்வநாயகத்தின் கட்சியும், வட்டமேசை புகழ் பொன்னம்பலம் கட்சியுமே. அரசகரும மொழியாகச் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்த நாள் தொடக்கம் ஏழரைச் சனியன் ஆட்சியில் அரைச் சனியன் ஸ்தானம் கிடக்கும் வரை, இவ்விரு கட்சியினரும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வருடாந்தக் கூட்டங்கள், மாநாடுகள், பகிரங்கச் சொற்பொழிவுகள் ஆகியவற்றில் எல்லாம் சிங்களத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது, தமிழின் உரிமையை அடைந்தே தீருவோம், சிங்களம் படிக்க வேண்டாம் என்று அண்டசராசரமும் நடுங்க சண்டமாருதம் செய்தார்கள். ஆனால் இந்த ஏழரைச் சனியன் ஆட்சியில் இடம் கிடைத்ததும் அதோ வருகிறது, இதோ வருகிறது என்று டூப் அடிக்கத் தொடங்கினார்கள். இன்று இவர்களை நம்பி சிங்களம் படியாத அரசாங்க ஊழியர்கள் அனுதையாகும்— சீட்டுக்கிழிக்கப்படும்— தறுவாயில், மாவட்ட சபைக்காரரும், வட்ட மேசைக்காரரும் ஒருவரையொருவர் பழிசாட்டி ஒளித்து விளையாடுவது மல்லாமல், தமிழ் ஊழியரை தாங்கள் ஒரு போதும் சிங்களம் படிக்க வேண்டாமென்று சொல்லவில்லையென்றும் அப்படிப் படியாமல் இருந்தது தமிழ் ஊழியரின் பிழை யென்றும் கூடச் சொல்லி முழுப் பூசனிக்காயைச் இலைச் சோற்றில் மறைக்கப் பார்க்கின்றனர். ஆனால், இந்த மாவட்டசபைக்காரரே, தமிழ் எழுதுவினைஞர் சங்கம் என்று ஒன்று உண்டாவதற்குக் காரணஸ்தர்கள். இச் சங்கத்தின் கொள்கை, தமிழுக்கு உரிமை கிடைக்கும் வரை சிங்களம் படிப்பதில்லை என்பதாகும். இதே போல், இன்று சிங்கள ஊழியர் மத்தியிலும் பல இன, மொழி, வெறிச் சங்கங்கள் பல தோன்றியிருக்கின்றன அது வேறு கதை. ''சிங்களம் படியாததன் காரணமாக கிடைக்க வேண்டிய வருடாந்த உயர்வையும் பெறத் தவறி, இன்று வேலை காலியாகும் நிலையில் இருக்கின்றோமே என்று கவலைப்படுகிறார்கள் அரசாங் தமிழ் ஊழியர்கள். அன்று, சிங்களம் படிப்பதை விட, வவுனியா சென்று விவசாயம் செய்வோம் என்று சூளுரைத்தவர்கள், இன்று எல்லாச் சாயமும் போய், என்ன செய்வதென்று அறியாமல் முழிக்கிறார்கள். அன்று இன, மொழிப் பற்றிப் பேசி வந்த தலைவர்களோ அவற்றையெல்லாம் இன்று மூட்டை கட்டி வைத்து விட்டு தமது வர்க்க உறவினரான டட்லி, ஜே. ஆர். தலைமையில் உள்ள ஏகாதிபத்தியச் சார்பு, பிற்போக்கு அரசாங்கத்தில் இரண்டறக் கலந்துள்ளார்கள்.

தமிழின் பெயரைச் சொல்லி யு. என். பி. யுடன் கணவன் மனவி உறவு பூண்ட இவர்கள் இப்போது, இந்த உறவுக்குப் பங்கம் வருமானால், மாவட்ட சபையும் வேண்டாம், அரசாங்க ஊழியரும் வேண்டாம், தமிழ் பல்கலைக் கழகமும் வேண்டாம் என்ற தோரணையில் அறிக்கைகள் விடுகின்றனர். ''தேசிய ஒற்றுமையைக் குலைக்க மாட்டோம் என கறள் பிடித்த 'இரும்பு' மனிதர் நாகநாதனும், காற்சட்டைக் காந்தி செல்வநாயகமும் திருவாய் மலர்ந்துள்ளளனர். கண்டிக்கு யாத்திரை சென்று, கம்பஹாவில் அடி வாங்கி, ஓடி வந்த ஜே. ஆர். கும்பலோடு, பா(வ)த யாத்திரை செய்த ஃபாதர் செல்வநாயகத்தின் கும்பல் கள்ள உறவு பூண்டுள்ளது. ஆனால், மக்கள் இவர்களை அரசியல் துறவற யாத்திரைக்கு அனுப்பும் நாள் தூரத்தில் இல்லை.



## திரிபுவாதிகள் கள்வர்கள் அல்லது அறிவிலிகள் லெனின் கூறுகிறார்

தேர்தல்கள் மூலம் அதிகாரத்தை வென்றெடுப்பது பற்றி கௌமன் திரிபுவாதிகள் தமது ஆட்களுக்கு ஆசை வார்த்தை கூறி வருகின்றனர். ஆனால் லெனின் இது பற்றி பின் வருமாறு கூறியுள்ளார்:

''தொழிலாளிவர்க்கம் முதலாளித்துவ வர்க்கத்தின் நுகத்தடியின் கீழ் கூலி— அடிமை நுகத்தடியின் கீழ் நடத்தப்படும் தேர்தல்களில் ஒரு பெரும்பான்மையை வென்றெடுக்க வேண்டும் என்றும், அதன் பிறகே அது அதிகாரத்தை வென்றெடுக்க வேண்டும் என்றும் கள்வர்கள் அல்லது அறிவிலிகள் மட்டுமே நினைக்க முடியும். இது முட்டாள் தனத்தின் நயவஞ்சகப் பேச்சின் உச்சம். இது வர்க்கப் போராட்டத்திற்கும், புரட்சிக்கும் பதிலாகப் பழைய அமைப்பின் கீழ் பழைய அதிகாரத்தோடு வாக்களிக்க வைப்பதே.''

-லெனின்

''இத்தாலிய, பிரஞ்சு, ஜெர்மன் கம்யூனிஸ்டுகளுக்கு வாழ்த்துக்கள்''
-தொகுத்த கட்டுரைகள் பாகம் 30. பக்கம் 40.

★

## பதவி இழந்த மேயரின் புலம்பல்

சென்ற வாரம் மட்டக்களப்பு மாநகர சபையின் முதலாவது மேயர் பதவி வகித்து வந்த் எம். பி. இராசதுரை பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்ற செய்தி வந்துள்ளது. தமிழரசு மேயர்களாலும், தமிழ் காங்கிரஸ் மேயர்களாலும் யாழ்ப்பாண மாநகர சபைக்கு என்ன கதி ஏற்பட்டதோ அதே கதிதான் மட்டக்களப்பு மாநகர சபைக்கும் ஏற்படும்போல் தெரிகிறது. பதவி ஆசை தமக்கு இல்லை என்று சொல்லிக்கொண்டே பதவியைக் கட்டிப் பிடிக்கும் தமிழரசு அரசியல் வாதிகளுக்கு எம். ஜி. ராமச்சந்திரனின் விசிறி இராசதுரை நல்லதோர் உதாரணம். அவர் மீதுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதுடன் பின்வருமாறு சொன்னாராம்: ''முன்பு நகரசபையாக இருந்தபோது, திசவீரசிங்கம் அதன் தலைவராக இருந்த சமயத்தில் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முயற்சித்தபோது, நான் தடுத்து நிறுத்தியிருக்கிறேன். திசவீரசிங்கம்இப்போது அந்த நன்றியையும்மறந்துஎனக்குஎதிராக கைகை உயர்த்தியிருக்கிறார்.'' இவ்வாறு மிகப் பரிதாபமாகப் புலம்பினாராம். தன்மேல் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களை மறுத்துரைக்கத் தைரியமில்லாத இராசதுரை செஞ்சோற்றுக் கடன் கழிக்கும்படி கெஞ்சியிருக்கிறார்.

பதவி இழந்த இராசதுரை விட்ட அறிக்கை இன்னும் பரிதாபமானது. அவரது அரசியல் அறிவீனத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. ''தனக்கு கடவுளின் கருணையினால்தான் மேயர் பதவி கிடைத்தது. ஆகவே, கடவுளால்தான் என்னை மேயர் பதவியிலிருந்து நீக்க முடியும்; இந்த அங்கத்தவர்களால் முடியாது'' என்ற கருத்துப்பட அறிக்கை விட்டிருக்கிறார். அரசுரிமை தெய்வத்தின்மூலம்தான் கிடைக்கிறது என்ற பதின்மூன்றாவது நூற்றாண்டுத் தெய்வீக வழியுரிமைக் கொள்கையை இருபதாம் நூற்றாண்டில் வாழ்கின்ற ''சொல்லின் செல்வர்'' ''அறிஞர்'' அண்ணாவின் சீடர் இராசதுரை விளம்பியிருக்கிறார். ''இராசதுரை அறியாத்தனத்தில் இப்படி எத்தனையோ சொல்லும். இதிலெல்லாம் என்ன?'' என்று சிறிதளவு அரசியல் தெரிந்தவர்கள் கூட நமட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார்கள். இராசதுரையின் தமிழரசுக் கட்சி ஆதரவாளரான மாவிட்டபுரம் துரைசாமிக் குருக்கள்கூட இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்வதில் எதுவித ஆச்சர்யமும் இல்லை.

பதவியாசை பற்றி எழுதும் போது சென்ற தமிழரசு மேதினக் கூட்டத்தில் தளர்பதி அமிர்தலிங்கத்தின் மனைவி கூறினதும் நினைவு வருகிறது. ''அமைச்சரின் மனைவியாக இருக்க வேண்டிய நான் வெறும் எம். பி. யின் மனைவியாகத்தானே இருக்கின்றேன். எங்களுக்கா பதவியாசை?'' என்று கேட்டார் அவர். ஆனால் அவரது உள்ளக் கிடக்கையில் துடித்துக்கொண்டிருக்கும் தணியாத ஆசைதான் இப்படியான வார்த்தைப் பிரயோகங்களில் தொக்கி நிற்கின்றன.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறி இராசதுரை கூட்ட மண்டபத்தை விட்டு வெளியே வந்தபோது, இளைஞரான பத்திரிகை நிருபர் ஒருவர் அவர் கண்ணில் பட்டாராம். இராசதுரைக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்ததாம். அந்த நிருபர்தானும் மாநகர சபை ஊழல்பற்றி பத்திரிகை ஒன்றுக்குச் செய்தியனுப்பியவர். இளைஞரான அந்நியருக்கு முன்னே சென்று, 'பீ, கெயர் புல்'—மெத்தக் கவனம்— என்று ஆங்கிலத்தில் உறுமினாராம், தமிழால் வயிறு கழுவும் இராசதுரை. பக்கத்தில் நின்ற உதயி மேயர் சின்னலெப்பை ''ஜே. அருக்கு எழுதி வேலையிலிருந்து நீக்கிப் போடுவன் ஜாக்கிரதை'' என்றாராம். நிருபர் அச்சத்தோடு இதை முற்போக்கு இளைஞர் ஒருவருக்குக். கூறினாராம் ''நான் ஒன்றும் தாறுமாறாக எழுதவில்லையே. மாநகரசபையின் சில ஊழல்களையே நிருபர் என்ற முறையில் பத்திரிகைக்கு எழுதினேன், அவ்வளவுதான். இப்ப வேலையும் போய்விடும்போல இருக்கு'' என்று துக்கத்தோடு கூறினாராம். ''பார்த்தீரா முதலாளித்துவப் பத்திரிகைச் சுதந்திரத்தை! ஆளும் வர்க்கத்தைத் தாக்காமல் இருக்கும் வரையும்தான் சுதந்திரம், எதிர்க்கத் தொடங்கும்போது எல்லாச் சுதந்திரமும் பறிபோகின்றது'' என்று முதலாளித்துவ பத்திரிகைச் சுதந்திரத்தின் போலியை அம்பலப்படுத்தினார் முற்போக்கு நண்பர்.

★

## எல்லோரும் சவாரி விடுகிறார்கள்

மாவிட்ட புரம் ஆலயப் பிரவேச இயக்கம் மும்முரம் அடைந்துகொண்டிருக்கும் போது தமிழுக்காக உயிர்விடுவதாகப் பீற்றிய எம். பி. மார் எவரும் அதுபற்றி வாய் திறக்காமல் மௌன விரதம் பூண்டிருப்பதைக் கண்டு ஆத்திரப்பட்ட நண்பர் ஒருவர் ''இவர்கள் என்ன செய்யிறாங்கள்?'' என்று கேட்டார். பக்கத்தில் இருந்த நண்பர் கூறினர்:

வி. என். நவரத்தினம் மயிர் (தாடி) விடுகிறார்.

இராசதுரை (மேயர் பதவி யிழந்து) கண்ணீர் விடுகிறார்.

தளர்பதி அமிர்தலிங்கம் சவால் விடுகிறார்.

உடுவில் தர்மலிங்கம் குறட்டை விடுகிறார்.

அழகக்கோன் கொட்டாவி விடுகிறார்.

ஃபாதர் செல்வநாயகம் கயிறு விடுகிறார்.

திருச்செல்வம் ஆவட்டம் மாவட்டம் விடுகிறார்.

பொன்னர் கோர்ட்டில் வழக்காடுகிறார்.

எல்லோரும் சேர்ந்து தமிழ் மக்கள் முதுகில் சவாரி விடுகிறார்கள்!

## கம்யூனிஸ்ட் கட்சி

-சுபத்திரன்-

வழி நடத்திச் செல்கின்ற சக்தி - எங்கள்
வளமான சிந்தனைக்கு வாழ்வூட்டும் சக்தி
பழி தீர்க்கும் போர் முறைகள் காட்டி - ஈழப்
பாட்டாளி வர்க்கத்தை ஒரு கொடியிற் கூட்டி
விழித்தெழுந்த மக்களெல்லாம் சேர்த்து - நாளை
விழப் போகும் ஏகாதி பத்தியத்தைப் பார்த்து
ஒழிக என ஒலிக்கின்ற நாதம் - எங்கள்
உயிரான மா ஓ வின் சிந்தனையின் போதம்.

## உலக வலம்
உஸ்மான்

# லுமும்பாவைக் கொன்ற கொலைகாரனை கட்டித்தழுவும் சோவியத் ஆளும் கும்பல்

ஆங்கிலேய— அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் சூத்திரப் பாவையான ''மலேஷியா''வை சென்ற வருட இறுதியில் சோவியத் யூனியன் அங்கீகரித்து ராஜதந்திர உறவுகள் ஏற்படுத்திக் கொண்டதைப் பற்றியும், சமீபத்தில் அந்நாட்டிற்குப் போர்க் கருவிகள் வழங்கியுதவ முன்வந்துள்ளமை பற்றியும் சில வாரங்களுக்கு முன் இப்பந்தியில் எழுதியிருந்தேன். சில தினங்களுக்கு முன்னர் தான் மலாயா கம்யூனிஸ்டுக் கட்சி தனது ஏகாதிபத்தியத்தின் இருபதாவது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் இருபதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அதை நினைவுகூரும் வகையில் மலாயா—தாய்லாந்து எல்லையில் ரோந்து புரிந்த கைப்பொம்மைப் பொலிஸ் படையொன்றைத் துவம்சம் செய்தது. இத்தகைய கம்யூனிஸ வெறி கொண்ட நாட்டிற்கு இராணுவ உதவி வழங்குவதைப் போலவே, ஆபிரிக்காவில் கொங்கோ (கின்ஷாஷா) நாட்டை ஆரத் தழுவியுள்ளது சோவியத் யூனியன்.

இன்று பெல்ஜிய—அமெரிக்க முதலாளிகளின் ஏவல் நாயாகச் சர்வாதிகாரம் புரிபவன் கொலைகாரன் மொபூட்டு தேசபக்தன் பட்ரிஸ் லுமும்பாவைக் கொலைசெய்த வலதுசாரி இராணுவ வெறியன். அன்று லுமும்பா கொலை செய்யப்பட்டபோது மாஸ்கோவில் லுமும்பா பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது. (அதன் சீரழிவை இன்னொரு சந்தர்ப்பத்தில் கவனிக்கலாம்) அதே லுமும்பாவிற்கு முழுத் துரோகமாய் மொபூட்டு ஆட்சியுடன் கைகோர்த்து நடக்கத் தொடங்கியுள்ளது சோவியத் திரிபுவாதக் கும்பல். சமீபத்தில் மொபூட்டுவிடம் விஸ்வாசப் பத்திரங்களைச் சமர்ப்பித்த சோவியத் தூதுவர் தனது அரசாங்கத்தின் நல்லெண்ணத்தையும், விஸ்வாசத்தையும் வற்புறுத்தினர்.

மொபூட்டு உரையாற்றுகையில், தனது நாடும் சோவியத் யூனியனும், ஒரே இலட்சியங்களுக்காகவும், பொதுவான சிந்தனையுடனும் உழைப்பதாகக் கூறினான். இது சிலருக்கு ஆச்சர்யமாகத் தோன்றும். மொபூட்டு, ஆபிரிக்காவில் எதிர்ப் புரட்சியாளன்; படுபிற்போக்குவாதி; தேசத்துரோகி, ஏகாதிபத்தியத்தின் காவல்நாய்; முதலாம் நம்பர் கொலைகாரன்; கம்யூனிஸ விரோதி. இவன் தனது குறிக்கோளும் சோவியத் யூனியனது குறிக்கோளும் ஒன்று என்பது, உண்மையை விளக்கிவிடுகிறது. ஏகாதிபத்தியத்தின் உற்ற சீடன் மொபூட்டு; திரிபுவாதம் ஏகாதிபத்தியத்தின் சகா; எனவே மொபூட்டு திரிபுவாதத்தின் உற்ற நண்பன் தான்!

## துரோகிகள் ஒன்று நினைக்க வெகுஜனம் வேறென்று எண்ணுகிறது

ஆனால் துரோகிகள் ஒன்று நினைக்க வெகுஜனம் வேறொன்றல்லவா எண்ணுகிறது. உதாரணமாக மேலே சொன்ன சோவியத் - கொங்கோ ஒத்துழைப்பு பற்றி கொங்கோலிய முற்போக்குவாதிகள் பேராத்திரம் கொண்டுள்ளனர். கொங்கோவின் விடுதலைப் படையின் மேற்குப் பிராந்திய அரசியல் ஆணைக்குழு சில தினங்களுக்கு முன் விடுத்த செய்தியொன்றில் சோவியத் திரிபுவாதக் கும்பலின் இந்த மானங்கெட்ட நம்பிக்கைத் துரோகத்தைக் கண்டித்துள்ளது. அச் செய்தியறிக்கையின் சில பகுதிகள் கவனிக்கத் தக்கன:

''பரஸ்பர ஒத்துழைப்பும், நட்பும் வர்த்தகமும் வைத்திருக்க சோவியத் திரிபுவாதக் கும்பல் முடிவு செய்து, ஜூன் இருபத்தோராம் தேதி சோஷலிஸத்தின் முதலாவது தூதுவர் மொபூட்டுவைச் சந்தித்திருக்கிறார்; இந்த இரத்த வெறிபிடித்த ஜெனரல் மொபூட்டு துரோகி; அமெரிக்க சி. ஐ. ஏ. நிறுவனத்தின் கையாள்; போராடும் ஆபிரிக்காவின் வீரன் லுமும்பாவைப் படுகொலை புரிந்தவன், (லுமும்பா கொலைசெய்யப்பட்டது செப்டம்பர் 4ந் தேதி, 1960) கொங்கோலிய மக்கள் இந்த ''நட்பை'' ஒருபோதும் ஏற்கமாட்டார்கள். அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் திரிபுவாதமும் ஒன்றுசேர்ந்துள்ளன; உலகம் முழுவதும் திரிபுவாதிகளின் துரோகத்தையும், காட்டிக்கொடுப்பையும், கைவிரிப்பையும் கண்டுள்ள கொங்கோலிய தேசபக்தர்கள் செய்யவேண்டியதைப் படித்துவிட்டனர். இறுதி ஆய்வில், கொங்கோவில் புரட்சி வெற்றி பெறும்; அதுபோல லெனின், ஸ்டாலின் மரபில் வரும் மகத்தான சோவியத் மக்கள் இறுதியில் குருஷ்சோவ் பரம்பரையைத் தூக்கியெறிவர் என்பதிலும் எமக்கு ஐயமில்லை''

★

## ரஷ்யப் பல்கலைக் கழகங்களை அமெரிக்க முறையில் இயங்கவைக்க வேண்டுமாம் ''புகழ்'' பெற்ற சோவியத் பேராசிரியர் யோசனை

ஆறேழு ஆண்டுகளுக்கு முன்னர், சீனக் கட்சித் தோழர்களும், அல்பேனியத் தோழர்களும் சோவியத்—அமெரிக்க இணக்கம், ஒத்துழைப்பு முதலியன பற்றிப் பகிரங்கமாக எடுத்துக்கூற முற்பட்ட சமயத்தில் நிகழ்ச்சிகள் வெளியுலகிற்கு அதிகம் தெரியாமல் இரகசியமாகவே திரிபுவாதிகளால் செய்யப்பட்டு வந்தன. குருஷ்சோவ் கும்பலையும் முதலாளித்துவ மீட்சிக்கான அடிப்படையையும் கூர்மையாகக் கண்டுகொண்ட ஏகாதிபத்திய ''மேதை'' டலஸ் மட்டும் பகிரங்கமாக எதிர்கால நல்லுறவுகள் பற்றிப் பேசினான். காலம் போகப் போக முதலாளித்துவ மீட்சி வலுப்பெறப்பெற, திரிபுவாதிகள் தருக்க ரீதியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் தயக்கமோ, கூச்சமோ இன்றி வெளிப்படையாகவே உடன்பாடு காண முற்பட்டனர்; வியாபாரத்தில் ஆரம்பித்து, விஞ்ஞானத்திற்கு வந்து, வேறு பல துறைகளுக்கு அது படர்ந்தது. தொடக்கத்தில் குருஷ்சோவ் போன்ற தலைக்கிடாய்கள் மட்டத்திலேயே 'ஒத்துழைப்பு' நடந்தது. அமெரிக்க ஜனாதிபதிக்கும் சோவியத் பிரதமருக்குமுள்ள நேரடித் தொலைபேசித் தொடர்பு (ஹொற்லைன்) நல்ல உதாரணம். இப்பொழுது பொதுமக்கள் (அதாவது இரண்டாம் மூன்றாம் தலைமைப் பதிவாளர்) மட்டத்திற்கு வந்துள்ளது. சென்றவாரம் இருநாடுகளுக்குமிடையில் வர்த்தக ரீதியில் இயங்கும் சிவில் விமான சேவை முதலாவது முயற்சி கட்டுப்பாடின்றி அமெரிக்கர் போய்வர இது வகை செய்கிறது. இதன் பயனாகவும், செக்கோஸ்லவாக்கியா இன்று எதிர்ப் புரட்சி நாடாகியுள்ளது. நாளைக்கு சோவியத் யூனியன் என்பதைச் சென்ற வாரம் முதல் செல்லத் தொடங்கியுள்ள அமெரிக்க ஜெட் விமானங்கள் குறித்து நிற்கின்றன.

இதனிடையே இன்னுமொரு செய்தியும் கிடைத்திருக்கிறது. ரஷ்யப் பல்கலைக் கழகங்களை அமெரிக்க முறையில் இயங்க வைக்க வேண்டும் என்ற யோசனையைப் ''புகழ்'' பெற்ற பேராசிரியர் (சோவியத் விஞ்ஞானப் பேரவை உறுப்பினர்) ஒருவர் தெரிவித்துள்ளார். யோசனை ருசிகரமானதுதான். முக்கியமான கருத்து யாதெனில், பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சியைக் கொந்திராத்தில் எடுத்துச் செய்ய வேண்டும் என்பது அதாவது இலாப நோக்குடன் ஆராய்ச்சியை நடத்தினால் விஞ்ஞானிகள் கூடிய வருவாயைப் பெறலாம். வேண்டியவருக்குத் தமது திறமையை விற்கலாம் என்றார் அவர். விஷயம் புதிதல்ல, லிபர்மன் என்ற எதிர்ப்புரட்சி பொருளாதார ''நிபுணர்'' கூறியதன் குழந்தைதான்.

ஆனால் இது காலவரை லெனின், ஸ்டாலின் காலத்துக் கல்வி அடிப்படைகள் நின்று நிலைத்தபடியால்தான் உலகில் சோவியத் விஞ்ஞானம் மதிப்புடன் விளங்கியது. சோவியத் ஸ்பூட்னிக் விண்வெளிக்குச் சென்றதன் பின் முதலாளித்துவ நாடுகள் துடித்துப்பதைத்து, சோவியத் விஞ்ஞான முறைகளைப் பின்பற்றலாயின. இன்று சக்கரம் சுழன்று விட்டது, சோவியத்தின் நலிவுப் பாதைக்கு இது மற்றொரு எடுத்துக் காட்டாக விளங்குகிறதல்லவா?

★

## எட்டடுக்குமாளிகையில் எஜமான்போலிருக்க பிரெஞ்சு திரிபுவாதிகள் ஏற்பாடு

சமீபத்தில் பிரான்ஸில் பொதுத் தேர்தல் என்ற கேலிக் கூத்தின்பின் எந்த முகத்துடன் பிரெஞ்சுத் திரிபுவாதக் கட்சி மக்கள் முகத்தில் விழிக்கும் என்று தெரியவில்லை. புரட்சிகர உணர்வுடன் பொங்கியெழுந்த மகத்தான தொழிலாளர்களையும், வீராவேசத்துடன் வீறுகொண்டு இயங்கிய முற்போக்கு மாணவர்களையும் கண்டித்து நாகரிகமான முறையில் தேர்தல் மூலம் பதவிக்கு வர முயன்றது திரிபுவாதக் கட்சி, பிராவ்தா போதித்ததும் அதுவே. இந்த ஜனநாயகப் பாராளுமன்றப் ''போட்டி'' முதலாளித்துவவாதிகள் தமக்குச் சாதகமாக அமைத்துக் கொண்ட சதுரங்க ஆட்டம் என்பதை மூடி மறைத்து நல்ல பிள்ளைக்கு நடிக்க முற்பட்டனர். பிரெஞ்சு திரிபுவாதிகள் தேர்தல்பிரச்சார மேடைகளில் டைகால் அணிவது போன்ற பூர்ஷ்வா உடைகளிலே தோன்றினராம். பிரெஞ்சு தேசிய சபையில் திரிபுவாதிகளின் தலைவனாயுள்ள றொபர்ட் பெலாங்கர் கூறினாரும், ''நாம் புரட்சி என்ற பதத்தைப் பயன்படுத்தும்பொழுது பூர்ஷ்வாக்களை அவர்களது ஆயுதத்தினாலேயே போரிடும் (பாராளுமன்ற) அரசியற் போராட்டத்தையே குறிக்கின்றோம்'' என்று.

திரிபுவாதிகள் நடத்தும் ஏடான லாஹியூமனைற் பிரபல பிரெஞ்சு கட்டிடக்கலை நிபுணர் வரைந்த கட்சியின் புதிய காரியாலயத்தின் மாதிரிப்படத்தை வெளியிட்டிருந்தது. எட்டடுக்கு மாளிகையான அக்கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படுமாம். கிராமங்களிலும் பட்டணங்களிலும், வீதிகளிலும் தொழிற்சாலைகளிலும் மக்களோடு மக்களாய் நின்று புரட்சி நடத்தாமல் எட்டடுக்கு மாளிகையில் எஜமான் போல இருக்கலாம்தானே! ஆனால் எத்தனை நாளைக்கு?

# நோர்மன் பெத்யூன்

''பிரபல்யமிக்க சத்திர வைத்தியர் நோர்மன் பெத்யூன் கனடா கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கத்தினர். 1936-ல் ஜெர்மன் இத்தாலிய பாசிஸவாதக் கொள்ளையர்கள் ஸ்பெயினில் படையெடுத்த போது அவர் போர் முனைக்குச் சென்று பாசிஸ விரோத ஸ்பெயின் மக்களுக்குச் சேவை செய்தார். சீன மக்களுக்கு, அவர்களின் ஜப்பானுக்கெதிரான பதில் தாக்குதல் யுத்தத்தில் உதவி செய்வதற்காக அவர் ஒரு வைத்தியக் கோஷ்டியின் தலைவராகச் சீனாவுக்கு வந்து, 1938-ம் ஆண்டின் வசந்தத்தில் யெனான் சென்றடைந்தார். பின்னர் சற்றைக்குள் அவர் ஷான்சி-சஹார்-ஹோபெய் எல்லைப் பகுதிக்குச் சென்றார். தீவிர சர்வதேசியத்துவத்திலும் மிகுந்த கம்யூனிச உணர்விலும் ஊறியிருந்த அவர் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் சேனைக்கும், விடுதலையாக்கப்பட்ட பிரதேசங்களின் மக்களுக்கும் சேவை செய்தார். அவர் காயமுற்ற வீரர்களுக்குச் சத்தர சிகிச்சை செய்கையில் இரத்தத்தில் விஷம் ஊறிப்போனதால் ஹோபெய்யில் ராங்ஹஸியென்னில் 1939, நவம்பர் 12-ம் திகதி இறந்தார்.''

**அவரது ஞாபகார்த்தமாக பீகிங்கில் ஒழுங்கு செய்யப்பட்ட கண் காட்சியை ஒட்டி எழுதப்பட்ட கட்டுரையை இங்கு பிரசுரித்துள்ளோம். -ஆர்-**

மகத்தான தலைவர் தோழர் மா சே.துங் எழுதிய ''மக்களுக்குச் சேவை செய்யுங்கள்'', ''நோர்மன் பெத்யூனின் ஞாபகார்த்தமாக'', ''மலைகளை அகற்றிய மூடக்கிழவன்'' ஆகிய இடைவிடாது படிக்கப்படும் கட்டுரைகளில் ஒன்றான ''நோர்மன் பெத்யூனின் ஞாபகார்த்தமாக'' என்ற கட்டுரையின் 28 வது வருடாந்த விழாவை முன்னிட்டுக் கடந்த டிசம்பர் 21-ந் திகதி இக்கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது, பீக்கிங் நகரில் தங்கியுள்ள சீன மக்கள் விடுதலைச் சேனையின் தலைமைப் பகுதிகளால், ஒழுங்கு செய்யப்பட்டது. மக்களுக்குச் சேவை செய்வதற்காக, சீனாவுக்கும் உலகப் புரட்சிக்கும் சேவை செய்வதற்காகச் சீனாவுக்கு வந்த கனடாவின் சத்திர வைத்தியரின் புரட்சிகரச் சேவைகளைக் கொண்ட காட்சிகளைக் காண இது வரை பத்து லட்சம் பார்வையாளர்கள் வந்து போயினர்.

இதே போன்று சீனா முழுவதிலும் உள்ள ஏனைய நகரங்களில் பல கண்காட்சிகள் நடைபெறுகின்றன. ஏராளமான மக்களின் வரவேற்புகள் அவற்றுக்குக் கிடைத்துள்ளன.

தோழர் பெத்யூனின் மகத்தான கம்யூனிச உணர்வு, மகத்தான பாட்டாளி வர்க்கக் கலாச்சாரப் புரட்சியின் பரிபூரண வெற்றிக்காக உழைக்கின்ற சீனாவின் பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதிகளையும், இளம் செங்காவலர்களையும், புரட்சிகர மக்களையும் பெரிதும் ஊக்குவித்துள்ளது.

''சீன மக்களின் விடுதலை இலட்சியத்தைத் தன்னுடைய இலட்சியமாகக் கொள்ளும்படி ஓர் அந்நியரைச் செய்யும் இந்த உணர்வு தான் எத்தகையது? இதுவே சர்வதேசியத்துவ உணர்வு; கம்யூனிச உணர்வு. இதிலிருந்து ஒவ்வொரு சீனக் கம்யூனிஸ்டும் கற்றுக் கொள்ளவேண்டும்,'' என்று தோழர் மா சே-துங் பெத்யூனின் ஞாபகார்த்தமாக எழுதியுள்ளார்.

முதலாளித்துவ சமுதாயத்தின் தவிர்க்க முடியாத உண்மைகளான வர்க்க அடக்குமுறையும், வர்க்கப் போராட்டமும் தோழர் பெத்யூன் படிப்படியாக மார்க்சிஸ—லெனினிசத்தின் உண்மைகளை உணரவும் ஏற்றுக்கொள்ளவும் செய்தது. அவர் கனடாவின் தொழிலாளர்களது போராட்டங்களில் குதித்தார். ஸ்பானிய மக்களுடன் சேர்ந்து பாசிஸ்டுகளை எதிர்த்துப் போராடுவதற்காக ஸ்பெயினுக்குச் சென்றார். அவர் கனடாவின் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். மனித வர்க்கத்தின் அதி உன்னத இலட்சியமான கம்யூனிஸத்துக்காக இறுதிவரை போராடுவதெனச் சபதமேற்றார்.

## சர்வதேசியம்

1938-ம் ஆண்டு வசந்த காலத்தில் கனடாவினதும், ஐக்கிய அமெரிக்காவினதும் கம்யூனிஸ்ட் கட்சிகள், ஜப்பானுக்கெதிரான பதில் தாக்குதல் யுத்தத்தில் சீன மக்களுக்கு உதவி செய்வதற்காகத் தோழர் பெத்யூனைச் சீனாவுக்கு அனுப்பினர். ''அங்குதான் எனது சேவை மிகவும் அவசியம் தேவைப்படுகிறது. அங்குதான் எனது சேவை மிகவும் பயனுள்ளதாய் இருக்கும்'', என்று அவர் கூறினார். தலைவர் மா ஓ வின் தலைமையிலிருந்த ஜப்பானிய விரோதத் தளப் பிரதேசங்களில் நோர்மன் பெத்யூன் மா சே-துங் சிந்தனையைப் பரிபூரணமாகப் புரிந்து கொண்டார். இறுதியில் அவர் ஒரு மகத்தான பாட்டாளி வர்க்கப் போராளி ஆனார்.

1938-டின் வசந்த காலத்தில் சீனப் புரட்சியின் மத்தியஸ்தானமாயிருந்த யெனானுக்கு வந்த நாள் முதல் தோழர் பெத்யூன் தலைவர் மா ஓவை சந்திக்க வேண்டுமென விரும்பினார்.

யென்ஹோ நதிக்கரையில், பகோடா மலையடிவாரத்தில், ஒரு சாதாரணக் குகையில் பெத்யூன் தலைவர் மா ஓவைச் சந்தித்த காட்சி வரையப்பட்ட வர்ணப்படம் ஒன்று கண்காட்சிச்சாலையில் உயிருடன் காணப்படுகிறது.

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான சீன் மக்களின் பதில் தாக்குதல் யுத்தம் பற்றியும், பொதுவாக உலக மக்களின் பாசிஸ விரோத யுத்தம் பற்றியும் தலைவர் மா ஓ பெத்யூனுக்கு மிகச் சிறந்த முறையில் விளங்கப்படுத்தினார். சீனாவிலும், உலகிலும் புரட்சி வெற்றி பெறும் என்று அவர் பெத்யூனிடம் உறுதி கூறினார். ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கெதிரான பதில் தாக்குதல் யுத்தத்தில் தனது பங்கைச் செலுத்துவதற்குத் தலைவர் மா ஓ பெத்யூனுக்கு உற்சாகமளித்தார். அன்றிரவு தோழர் பெத்யூன் தனது தினக்குறிப்பில் பின்வருமாறு எழுதி வைத்தார். ''வெறுமையான அந்த அறையில் நான் தலைவர் மா ஓவின் முன்னனிலையில்—அவரது அமைதியான அறிவுரைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையில்—நான், நீண்ட பயணத்தைப் பற்றியும், ஆறாயிரம் மைல்கள் அப்பெரும் பாதையில் தென் பகுதியில் இருந்து மலைப்பிரதேசத்துக்கு தோழர் மா சே-துங் கம்யூனிஸ்டுகளைத் தலைமை தாங்கிச் சென்றதையும் எண்ணிப் பார்த்தேன். இன்று கொரில்லா யுத்தத்தின் மூலம் எதிரிக்குத் தொல்லை கொடுத்து, ஆக்கிரமிப்பாளர்களின் சிறந்த யுத்த ஆயுதங்களின் சக்தியைப் பயனற்றதாக்கிச் சீனாவைப் பாதுகாப்பதே இன்று அவர் கையாளும் தந்திரோபாயம் தோழர் மா சே-துங் எல்லோரையும் கவர்ந்து கொள்வதன் காரணத்தை இன்று நான் புரிந்து கொண்டேன். எமது உலகின் தலை சிறந்த மனிதர்களின் அவரும் ஒருவர்.

## தலைவர் மா ஓ வினால் ஆகர்ஷிக்கப்பட்டார்

அதன் பின் அவர் பல தடவை சீனத் தோழர்களையும் வெளிநாட்டுத் தோழர்களையும் பார்த்து, ''மா சே-துங் சீன மக்களிடம் இருப்பது அவர்களுக்கு எவ்வளவு பெருமை! மா சே-துங் சீன மக்களிடமிருப்பது அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி!'' என்று கூறுவார்.

தலைவர் மா ஓ வின் சந்திப்பு நோர்மன் பெத்யூனின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாகும். ஜப்பானை எதிர்த்த கொரில்லா யுத்தத்துக்குச் சேவை செய்கின்ற தனது வைத்திய சிகிச்சையுடன் மா சே-துங் சிந்தனையை மேலும் சிறப்பாக ஒருமைப் படுத்தும் நோக்கத்துடன், அவர் மா சே-துங் நூல்களைப் படிக்கத் தொடங்கினார். ''சீன சமுதாயத்தின் வர்க்கங்களின் ஆராய்வு'', ''ஹூனானில் உள்ள விவசாயி இயக்கத்தின் ஓர் ஆராய்வு'', உட்படத் தலைவர் மா ஓ வின் கட்டுரைகள் பலவற்றை மொழி பெயர்ப்பாளர்களிடம் வாய்ப்பாடமாகவே கேட்டுத் தெரிந்து கொண்டார். படிக்கப்படிக்க மா சே-துங் சிந்தனையின் வெல்லற்கரிய உண்மைகளை அவர் மேன் மேலும் உணர்ந்தார். தனது வாழ்க்கையிலோ, வேலையிலோ ஏதாவது பிரச்சினை தோன்றினால் அப்பிரச்சினையைத் தீர்வு காண்பதற்கு அவர் தலைவர் மா ஓ வின் கட்டுரைகளின் உதவியை நாடுவார். 1937-ம் ஆண்டு பதில் தாக்குதல் யுத்தம் ஆரம்பமாகியது. துரோகி சியாங்-கே சேக்கின் தலைமையிலிருந்த கோமிண்டாங் படைகள், ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் முன்னால் சிதறிப் போயின. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியை அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள் சீனப் பிரதேசங்கள் பலவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர். கம்யூனிஸ்ட் கட்சி மக்களை அணிதிரட்டியது. 1937 செப்டம்பர் கடைசிப் பகுதியில் தலைவர் மா ஓ வின் மிக நெருங்கிய தோழரான லின் பியா ஓ மக்கள் யுத்தம் பற்றிய மகத்தான மா ஓ வின் கொள்கைகளைப் பின்பற்றி பிங்சிங்குவான் கடவை யுத்தத்துக்குத் தலைமை தாங்கினார். எட்டாவது மார்க்கச் சேனையின் வீரமிக்க 115 டிவிசன் மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஜப்பானியத் துருப்புகளை ஒழித்துக் கட்டியது. இது தான் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கிடைத்த முதற் பெரும் தோல்வியாகும்.

## பெத்யூன் சென்னது

1938 ஜூன் மாதத்தில், ஜப்பானுக்கெதிரான பதில் தாக்குதல் யுத்தத்தின் முன்னணியான ஷான்சி—சஹார்—ஹோபெய் எல்லைக்கு பெத்யூன் வந்தடைந்ததும் சீனத்தோழர்களுடன் கைகுலுக்கிவிட்டு அவர் பின்வருமாறு கூறினார்:

''கனடாவில் இருக்கும் போது பிங்சிங்குவான் வெற்றியைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். யெனானில் நான் தலைவர் மாஓவிடம், பிங்சிங்குவான் எங்கிருக்கிறது என்று கேட்டேன். அதன்பின் நான் இங்கு வரவிரும்புவதாகக் கூறினேன்.''

போர்வீரர்களும் சாதாரண மக்களும் அவரைக் குதூகலத்துடன் வரவேற்றனர். வரவேற்புக் கூட்டமொன்றில், மா சே-துங் சிந்தனையை ஆயுதமாகக் கொண்ட போர்வீரர்களையும் மக்களையும் பார்த்து பெத்யூன் பின்வருமாறு கூறினார்.

''கம்யூனிஸம் வெறுமனே பேசுகின்ற, சிந்திக்கின்ற முறையாக மட்டும் இல்லாமல் ஒரு வாழ்க்கை முறையாகவே அமைந்துள்ள மக்கள் மத்தியில் இருப்பதற்கும் வேலைசெய்வதற்கும் கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன். பதில் தாக்குதல் யுத்தத்தில் வெற்றி கிட்டும்வரை சீனத் தோழர்களாகிய உங்களுடன் இறுதி வரை தோளோடு தோள் நின்று போராடுவேனென உறுதி கூறுகின்றேன்''

இந்த உறுதியை அளித்த பின் டாக்டர் பெத்யூன் தலைவர் மாஓவின் கட்டுரைகளைப் படிப்பதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும், சீன மக்களின் ஜப்பானுக்கெதிரான பதில் தாக்குதல் யுத்தத்தின் சேவைக்காகவும் தன்னை ''முழுமையாகவும் பரிபூரணமாகவும்'' அர்ப்பணித்து வாழ்க்கையை ஆரம்பித்தார். ''தோழர் பெத்யூன் அவர்களின் உணர்வு, தம்மைப் பற்றிய சிந்தனை ஒன்றுமின்றி பிறருக்கான அவரது பூரணத் தியாகம், தமது வேலையில் அவர் கொண்டிருந்த எல்லையற்ற பொறுப்புணர்ச்சியிலும், தோழர்கள்மீதும், மக்கள் மீதும் அவர் வைத்திருந்த எல்லையற்ற இதய ஆர்வத்திலும் காணப்பட்டது,'' என்று தலைவர் மாஓ கூறியுள்ளார்.

## மா சே-துங் சிந்தனையை அனுஷ்டித்தல்

காயப்பட்டவர்களின் வைத்திய சிகிச்சைகளைச் சீர்ப்படுத்துவதற்காக டாக்டர் பெத்யூன் எடுத்துக்கொண்ட அதிர்ச்சி தரக்கூடிய ''ஐந்து வார இயக்கம்'' போதிய வசதிகளற்ற சிகிச்சைச்சாலை ஒன்றை அதைவிட ஒழுங்கான வைத்திய நிலையம் ஆக்கியதேயாகும்.

இதனை அடுத்த சில காலத்தில் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்கள், ''யாவரையும் கொல், யாவற்றையும் கொள்ளையடி, யாவற்றையும் தீக்கிரையாக்கு,'' என்ற பாசிஸக் கொள்கையை அமுல் நடத்திக் கொண்டு வந்தனர். வைத்திய நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. அதன் உபகரணங்கள் யாவும் அழித்தொழிக்கப்பட்டன. ஆத்திரமடைந்த டாக்டர் பெத்யூன் ''பாசிஸக் கொள்ளைக்காரர்களின் கொடுமையை நான் குறைவாகக் கணித்துவிட்டேன்,'' என்று கூறினார்.

வைத்திய நிலையம் மறுபடியும் கட்டி எழுப்பப்பட வேண்டுமா? ஜப்பானிய ஆக்கிரமிப்புக் கெதிரான கொரில்லாப் போராட்டத்துக்கு இசைய வைத்திய வேலையை எப்படி ஒழுங்கு செய்வது? உழைக்கும்

ங்களின் புதல்வர்களைக் கொண்ட சேனைக்கு எப்படிச் சிறப்பாகச் சேவை செய்ய முடியும்? இக் கேள்விகளை மனதில் வைத்துக்கொண்டு டாக்டர் பெத்யூன், ''நீண்டகால யுத்தம் பற்றி,'' ''ஜப்பானிய எதிர்ப்புக் கொரில்லா யுத்தத்தின் யுத்த தந்திரப் பிரச்சினை கள்'' ஆகிய தலைவர் மாஓவின் கட்டுரைகளையும், ஏனைய மாஓவின் கட்டுரைகளையும் படித்தார்.

## உயிருடன் படித்து உயிருடன் பிரயோகித்தார்

''கொரில்லாப் போராட்டம் ஒரு தன்மையுடையதாய் இருப்பதால், கொரில்லாப் படைகளைச் செய்யவேண்டிய தன்மைக்கு ஏற்ப, எதிரியின்

பட்டன. செங்கற்களால் கட்டப்பட்ட கிராமிய மக்களின் கட்டில்கள் காயமடைந்தவர்களின் கட்டில்களாகப் பயன்படுத்தப்பட்டன. இப்பேர்ப்பட்ட வைத்தியசாலையை ஒருபோதும் அழிக்க முடியாது. ஏனெனில், மக்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். பெத்யூன் அவர்கள் தலைவர் மாஓவின் கட்டுரைகளை உயிருடன் படித்து, உயிருடன் அனுஷ்டித்த சந்தர்ப்பங்களுள் இது ஒன்று.

மா சே-துங் சிந்தனையை ஆயுதமாகக் கொள்ளவேண்டிய அவசியத்தை பெத்யூன் கூடுதலாக உணர்ந்துகொண்டார். ''கொரில்லா யுத்தத்தில் பிரதேச வெளிப்புற வைத்திய நிலயங்களுக்கான ஸ்தாபனமும், தொழில் நுட்பமும்''

கொண்டே சிறந்த ஆயுதங்களைக் கொண்ட எதிரியைத் தோற்கடிக்க முடிந்தது. இதற்குக் காரணமென்ன?

### ஆயுதங்களல்ல மனிதன்தான்

மறுபடியும் பெத்யூன் தலைவர் மா ஓவின் ''நீண்ட நாள் யுத்தம் பற்றி'' என்ற கட்டுரையைப் படித்தார். அதில் பின்வரும் வாக்கியங்கள் காணப்பட்டன. ''யுத்தத்தில் ஆயுதங்கள் முக்கியமானவை, ஆனல் தீர்க்கமானவை அல்ல. பொருட்களல்ல மக்கள்தான் தீர்க்கமானவைர்கள். பலப் பரீட்சையென்பது இராணுவ, பொருளாதாரப் பலப் பரீட்சை மட்டுமல்ல, மனித சக்தியினதும், உணர்வினதும் பரீட்

## மாசே-துங் சிந்தனையாளன்

கொரில்லா யுத்தத்தின் பிரத்தியேகமான நிலைமையில், இரத்தம் சேகரிக்கும் பிரச்சினையில் நோர்மன் பெத்யூன் தலைவர் மாஓ வின் பின்வரும் வாக்கியங்களிலிருந்து கற்றுக் கொண்டார். ''யுத்தம் செய்வதற்கு வேண்டிய சக்தி பெருமளவில் பொது மக்களிடமிருந்து கிடைக்கும்.''

### ரத்த தானம்

இந்த மக்கள் யுத்தத்தில் முன்னணியில் உள்ளவர்களுக்கு உதவி செய்வதற்காக, பெத்யூன் அவர்கள், பொது மக்களுடமிருந்து இரத்த தானம் கொடுக்கும் தொண்டர் படை

யம். சீனவின் விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களில், இராணுவத்தினர்களும், மக்களும் உற்சாகத்துடன த து இரத்தத்தைத் தானம் செய்ய வந்ததை டாக்டர் பெத்யூன் கண்டார். இந்த வகையில் பெத்யூன் அவர்கள் தலைவர் மாஓவின் வெகுஜனக் கொள்கையைப் புரிந்துகொண்டு அனுஷ்டித்தார்.

''பொதுமக்கள்தான் எமது இரத்த வங்கி, வெளிநாட்டு வைத்திய சரித்திரத்தில் இது கேள்விப்படாத ஒன்று. மக்களை அணிதிரட்டுங்கள், அவர்களை நம்பியிருங்கள் என்று தலைவர் மாஓ கூறுகிறுர். எவ்வளவு

# மகத்தான சர்வதேசப் போராளி

லமையையும், யுத்தம் செய்ற பிரதேசத்தின் நிலைமையையும் அப் பிரதேசத்தின் களின் நிலைமையையும் ணர்ந்து அவற்றிற் கேற்ப வப்போது உபயோகித்துக் ாள்ளவேண்டும். கலைதல், ிப்பிட்டுத் தாக்குதல், இடங்களை மாற்றிக் கொள்ளுதல் கியவை இவற்றின் பிரதான றைகள்,'' ''யுத்தத்தின் ிப்பான அம்சங்களிலிருந்து ிப்பான வழிகள் பலவும் ிப்பான முறைகள் பலவும் ான்றும்,'' எனத் தலைவர் ஓ போதிக்கின்றுர்.

இப் போதனையைப் படித்த ானும், தனது அநுபவத்தை ுபடி ஆராய்ந்த பின்னும் ாக்டர் பெத்யூன் பின்வரு

என்ற தனது நூலில், 1939-ம் ஆண்டு அவர் பின்வருமாறு எழுதினர்: ''இன்றைய கொரில்லா யுத்தத்தின்போது பலவிதமான புதிய போராட்ட முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இருபத்தைந்து வருடங்களுக்கு முன் அவை காணப்படுவது அரிது அல்ல என்று கண்டுபிடிக்கப்படவில்லை. பிரதானமாக உள்ள வேறுபாடு இராணுவக் குழுக்கள் பெருமளவு அணிதிரட்டப்படுவது ஆனல் நிரந்தரமான நிலைகள் ஏதும் இல்லாதிருப்பது. சகல நடவடிக்கைகளும் துரிதமானவை, நேரத்துக்கு நேரம் மாற்றக்கூடியவை. ஆதலால் இந்நிலையில் வைத்திய சேவைகளும் இந்நிலைமைக

சையுமாகும். இராணுவ சக்தியும், பொருளாதார சக்தியும் மக்களினல்தான் பயன்படுத்தப்பட முடியும்.''

சிவுஹிசென் யுத்தத்தில் ஒரு கம்பனி இராணுவத் தலைவர் வயிற்றில் கடுமையான காயம் பட்ட போதிலும், வீரத்துடன் வெற்றி கிட்டும்வரை போர் புரிந்தார். மனிதன் தான் தீர்க்கமானவன் என்ற தலைவர் மாஓ வின் போதனையைத் தோழர் பெத்யூன் நினைவுபடுத்தினர். ஆதலால் அந்தக் கம்பனி இராணுவத் தலைவரை விரைவில் மறுபடியும் செயல்படுத்துவதற்காக தன் சக்தி முழுவதையும் பிரயோகித்து அவருக்கு சிகிச்சை செய்தார். அவர் விரைவில் குண

ஒன்றை உருவாக்குவோம் என்று கூறியதும், வைத்தியக் குழுக்களின் தலைவர்கள் அந்த ஆலோசனையை உடனடியாக ஆதரித்தனர், ஏராளமான அக் கிராமத்து மக்கள் இரத்தம் தானம் செய்யத் தயாராக முன் வந்து தமது பெயர்களை பதிவு செய்து கொண்டனர். ''எமது சொந்த இரத்தத்தைக் கொடுத்து எமது போராளி ஒருவனைப் பாதுகாப்பது பத்து எதிரிகளை கொல்வது போன்றதாகும்,'' என்று டாக்டர் பெத்யூன் குறிப்பிட்டார். வைத்தியக் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் தேவைப்படும் போது இரத்த தானம் செய்வதற்காகத் தமது இரத்தப் பிரிவைப் பரிசோதித்து வைத்துக் கொண்டனர்.

இந்த வகையான வெகுஜன இரத்த வங்கி ஓர் புதிய விஷ

சிறப்பான மனப்பான்மை!'' என்று தோழர் பெத்யூன் பிரகடனம் செய்தார்.

''எள்ளத்தனையும் சுயநலமற்ற உணர்வை நாம் எல்லோரும் அவரிடமிருந்து (நோர்மன் பெத்யூனிடமிருந்து) கற்றுக் கொள்ளவேண்டும். இந்த உணர்வைக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு மிகப் பயனுள்ளவராக வாழ முடியும். ஒருவருடைய திறமை பெரிதாக அல்லது சிறிதாக இருக்கலாம். ஆனல் இந்த உணர்வு அவருக்கு இருந்தால், அவர் உன்னத சிந்தையும் தூய்மையும் உடையவராக, ஆத்மீக பலமுடைய, கொச்சை நப்பாசைகளைக் கடந்த ஒரு மனிதனக, மக்களுக்குப் பயனுள்ள ஒரு மனிதனக இருப்பார்'' எனத் தலைவர் மாஓ போதித்துள்ளார்.

—தொடரும்

# மா சே-துங் சிந்தனையை உயிருடன் படித்து

# உயிருடன் பிரயோகித்த கம்யூனிஸ்ட்

று கூறினர்: ''முன்பு ாரில்லா யுத்தத்தின் தன் யை நான் புரிந்துகொள்ள லை. இச் சம்பவம் எனக்கு மான போதனையைத் தந் ளது. எதிரிக்கு அருகாமை உள்ள பிரதேசத்தில் ங்கான வைத்திய நிலையத் க் கட்டவேண்டுமென்ற எண்ணம் ஒரு பக்கமா .''


ளிமயமான மா சே-துங் தனையின் வழிகாட்டலின் டாக்டர் பெத்யூன் பல த் தோழர்களிடமிருந்து லாசனைகளைக் கேட்டார். தியில், ''விசேடமான ஓர் ிர சிகிச்சை நிலையம்'' கட் பட்டது. நோயாளிகளின் டுகளெல்லாம், கிராமங் லுள்ள வீடுகளில் வைக்கப்

ளுக்கு இணைந்தவையாய் அமைக்கப்பட வேண்டும்.''

பின்பு 1939 ஏப்ரல் மாதத்தில், மத்திய ஹோபெய் மாகாணத்தின் சம தரைகளில் வீரமிக்க எட்டாம் மார்க்கச் சேனை சிவு ஹெய்செய் யுத்தத்தை நடத்தி ஜப்பானிய துருப்புகளின் கடுமையான தாக்குதலைத் தோற்கடித்தது. இப் பிரச்சினை பெத்யூன் அவர்களின் சிந்தனைக் குள்ளாகியது. மலைகளிருந்த நிலைமைகளைப் பயன்படுத்தி எட்டாவது மார்க்கச் சேனை எதிரியைத் தோற்கடித்தது. ஆனல் சம தரையிலும் கூட, எட்டாவது மார்க்கச் சேனை சிறு தானியங்களையும் (உணவு) வைத்துக்

மடைய வேண்டுமென்பதற்காக பெத்யூன் அவர்கள், அவ் வீரனுக்குச் சமையல் கூடச் செய்து கொடுத்தார்.

அத் தோழர் குணமடைந்து போர்முனைக்குச் செல்லும் போது பெத்யூன் அவர்களின் கைகளை அன்புடன் குலுக்கி நன்றி உணர்வுடன் அவரைப் பார்த்து ''போர் முனையில் இன்னும் பல எதிரிகளை நான் கொன்று குவிப்பேன்,'' என்று கூறிச் சென்றுர். பின்பு ஒரு தடவை இதனை நினைவு கொண்ட தோழர் பெத்யூன் பின் வருமாறு கூறினர்: ''அவ் வாலிபன் உறுதியாகவும், துணிகரமாகவும் இருக்கிறுன்' அப் பேர்ப்பட்ட போராளிகளுக்குச் சேவை செய்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.''



தலைவர் மா ஓ வின் நூல்களைப் படியுங்கள், அவரது போதனைகளைப் பின் பற்றுங்கள், அவரது பணித் தல்களின் பிரகாரம் செயலாற்றுங் கள்.

லின் பியா ஓ

# உலகெங்கிலும் பொங்குமாங் கடலென சீறி யெழும் மாணவர் கிளர்ச்சிகள்

## பழமையை தகர்த்து புரட்சிகர மாற்றத்தைக் கோரும் போராட்டங்கள்

இத்தாலியில் மாணவர் போராட்டம் சென்ற வருட இறுதியிலிருந்து பாய்ச்சல் வேகத்துடன் முன்னேறி வருகிறது. கடந்த ஒரு சில மாத காலத்திற்குள் அப் போராட்டம் உரோம், மிலான், பிஸா. புளோன்ரஸ், ஷீனு, நேப்பிள்ஸ் பலேர்மோ முதலான நகரங்களில் பரவியுள்ளது. ஆயிரமாயிரம் மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து வீதிகளில் சென்றவண்ணம் இருந்தனர். பல்கலைக் கழக கட்டிடங்களும், 22 பல்கலைக் கழகங்களின் தலைமை அலுவலகங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. பெருந் தொகையான மத்திய பாடசாலை மாணவர்களும் இப் போராட்டத்தில் இணைந்துள்ளனர். இந்தப் போராட்டத்தின் ஈட்டி முனை நலிவுற்ற கல்வி அமைப்பிற்கெதிராகவும், மாணவர் இயக்கத்தை மிருகத்தனமாக நசுக்க முனைகின்ற பிற்போக்கு இத்தாலிய அதிகார வர்க்கத்திற்கெதிராகவும் செலுத்தப்பட்டுள்ளது.

எழுச்சியுற்ற, இவ் இயக்கத்தை அடக்கி யொடுக்குவதற்காக, பிற்போக்கு இத்தாலிய அதிகார வர்க்கம் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளையும் துன்புறுத்தல்களையும் முற்போக்கு மாணவர்களுக்கெதிராக பல தடவைகளில் கட்டவிழ்த்து விட்டது. முதலில், அவர்கள் ஒரு சில கைக் கூலிகளையும், வலதுசாரி மாணவர்களையும் மாணவர்களால் கைப்பற்றப்பட்ட ஒரு பாடசாலையினுள் புகுவதற்குத் தூண்டிவிட்டனர். இம் முயற்சி தோல்வியில் முடியவே அவர்கள் பெருந் தொகையான பிற்போக்கு பொலிசாரை பலாத்காரமாக பாடசாலைகளைக் கைப்பற்றவும், பல்கலைக் கழக வளவுக்குளிருந்து மாணவர்களை அப்புறப்படுத்தவும் அனுப்பி வைத்தனர். இப்படியாகவே உரோம் பல்கலைக் கழகம் ஜூன் 3-ந் தேதி 1500 போலிசாரால் கைப்பற்றப்பட்டது. மிலானில் உள்ள பல பல்கலைக் கழகங்கள் ஜூன் 8-ந் தேதியில் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன. தற்பொழுது நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் அநீதியான முறையில் சிறையிலிடப்பட்டுள்ளனர். 700 க்கு மேற்பட்டோர் ஒன்றில், 'வழக்கு விசாரணை முடிவடையும் நிலையிலோ அல்லது 'விசாரணைக்காகவோ உள்ளனர்,

எனினும், அடக்குமுறை எவ்வளவுக்குப் பெரிதாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு கிளர்ந்தெழுதலும் பெரிதாக இருக்கும். இத்தாலிய மக்களின் போராட்டச் சுவாலை மேலும் மேலும் உயர்வடைகிறது. மிலானிலுள்ள கத்தோலிக்கப் பல்கலைக் கழக மாணவர்கள் ஜூன் 8. ந் தேதி ஒரு பிரமாண்டமான கூட்டத்தை நடாத்தி அதில் மீண்டும் பல்கலைக் கழகத்தை கைப்பற்றுவதாகத் தீர்மானித்தனர். பல தடவைகளில் பல நூற்றுக் கணக்கான பல்கலைக் கழக மாணவர்கள் அநீதியாகக் கைப்பற்றப்பட்ட பாடசாலைகளில் உள்ள பொலிசாரைத் தாக்கியுள்ளனர். உரோம் பல்கலைக் கழக மாணவர்கள் பிற்போக்கு ஆட்சியாளருக்கெதிராகப் போராட்டம் நடத்துவதற்காக தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் முதலானோரின் ஐக்கியத்தைக் கோரியுள்ளனர். டியூரினில் அரசியல் விஞ்ஞானக் கலைக் கூடத்தை கைப்பற்றியுள்ள மாணவர்களால் வெளியிடப்பட்ட அறிக்கைப் பிரகடனத்தில் இத்தாலிய மாணவர்கள் கல்வி அமைப்பில் சீர் திருத்தத்தை மட்டும் கோரவில்லை, சமுதாய மாற்றத்தையும் கோருகிறார்கள். அதை அவர்கள் அரசியல் புரட்சியென அழைத்தனர். புளோரன்ஸில் ஊர்வலம் நடத்திய 2000 மாணவர்கள் தலைவர் மாஓவின் படங்களையும், செம்பதாகைகளையும் கொண்டு சென்றனர். மிலானில் உள்ள ஓவியர்கள் தாங்கள் கைப்பற்றிய கலைக் காட்சிச் சாலையின் சுவர்களில் சிவப்புச் சிவரொட்டியில் ''தலைவர் மாஓ நீடூழி வாழ்க!'' எனக் குறிப்பிட்டுள்ளனர். மேலும் அவர்களால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில் நலிவுற்ற முதலாளித்துவ அமைப்புக்கெதிராக தொழிலாளர்களாலும் மாணவர்களாலும் நடத்தப்படுகின்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதுடன் அதில் பங்குகொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

தொழிலாளர்கள் முற்போக்கு மாணவர்களின் இயக்கத்துக்கு அவர்களின் முழு ஆதரவையும் தெரிவித்துள்ளனர். ஏகபோக முதலாளித்துவமும், பிற்போக்கு அரசாங்கமும் தங்களின் பொருளாதார நெருக்கடிகளை தொழிலாளர்கள் மேல் சுமத்துவதை எதிர்த்து இத்தாலிய தொழிலாளர்கள் தொடர்ச்சியான பல வேலை நிறுத்தங்களைச் செய்துள்ளனர், ஜூன் 4 ல் லான்சியானோ தென் பகுதி நகரத் தொழிலாளர்கள் ஒரு வாரத்தில் இரண்டாம் முறையாக பொது வேலை நிறுத்தத்தை நடத்தினர், ஜூன் 14.ல் பத்திரிகை தொழிலாளர்களாலும், ஊழியர்களாலும் நாடு தழுவிய 48 மணி நேர வேலை நிறுத்தம் தொடங்கியது. பலெர் மோ, மார்சாலா, டியெஸ்ட், பிஸா முத முதலான நகரங்களிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்களையும், ஊர்வலங்களையும் நடத்தினர். நேப்பிள்ஸில் தொழிலாளர்கள் அமெரிக்க பொது மின்சார கம்பனியின் கீழ் இயங்குகின்ற மின்சார யந்திர தொழிற்சாலையை கைப்பற்றியுள்ளனர்.

நாட்டின் வட மேற்குப் பகுதியிலுள்ள சவோனு துறைமுகத் தொழிலாளர்கள், போராடுகின்ற பிரெஞ்சு தொழிலாளர்கள் மாணவர்களுக்குத் தமது ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கு முகமாக பிரஞ்சுத் துறைமுகங்களிலிருந்து வருகிற கப்பல்களின் பொருள்களை இறக்குவதற்கு மறுத்துவிட்டனர்.

### பிரித்தானியாவில்

முற்போக்கு மாணவர் இயக்கம் வேகமாக வளர்ச்சி யடைகிறது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக மாணவர்கள் பிற்போக்கு பல்கலைக் கழக சட்டங்களுக்கெதிராக சென்ற அக்டோபர் மாதம் தொடக்கம் போராடி வருகிறார்கள். இப் பல்கலைக் கழகத்தின் 20 கல்லூரிகளிலுள்ள பல நூற்றுக்கணக்கான பட்டதாரி மாணவர்கள் அரசியல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதைத் தடை செய்யும் பிற்போக்கு பல்கலைக் கழகச் சட்டங்களை ஒழிக்கும்படி கோரி ஜூன் 3-ந் திகதி பெரும் ஊர்வலத்தை நடத்தினர். அவர்கள் இறுதியாக பல்கலைக் கழக நிர்வாகிகளை அரசியல் துண்டுப் பிரசுர விநியோகத் தடை உத்தரவை நீக்குவதற்கு ஒப்புக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தினர்.

லண்டன் பொருளியல் கல்லூரி மே 23-ந் திகதி மாணவர்களால் கைப்பற்றப்பட்டது. அவர்கள் செங்கொடிகளை கட்டடங்களின் மேல் பறக்கவிட்டதுடன், ''அழுகிய முதலாளித்துவ பொருளாதாரம் ஒழிக!'' என்னும் புரட்சிகர சுலோகங்களையும் எழுதியுள்ளனர்.

ஹல் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த. 400 மாணவர்களால் ஜூன் 8-ந் திகதி நிர்வாக அலுவலகம் கைப்பற்றப்பட்டது. பல்கலைக் கழகத்தின் பெயரை மறைத்து ஒட்டப்பட்டுள்ள 14 அடி நீளமான சுவரொட்டியில் சிகப்பு எழுத்துக்களில் ''சுதந்திரப் பல்கலைக் கழகம்'' என எழுதப்பட்டுள்ளது. இன்னுமொரு அறிவித்தலில் ''ஜனநாயகத்துக்காக உள்ளிருப்பு'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட லண்டனிலுள்ள ஹோன்ஸி கலைக் கல்லூரியினதும், தென் லண்டனிலுள்ள குரோய்டன் கலைக் சல்லூரியினதும் மாணவர்கள் பலநாட்களாக தொடர்ந்து உள்ளிருப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தங்களின் உரிமைகளுக்கான மாணவர்களின் இயக்கம் வேகமாக முன்னேறி வருகிறது. தற்போதைய பரீட்சை முறை ஒழிக்கப்பட வேண்டுமென்றும், பல்கலைக் கழகத்தை நடத்துவதில் மாணவர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும் மாணவர்கள் கோரியுள்ளனர்.

### சுவீடனில்

மே 25-ந் திகதி ஸ்டொக்ஹோமில் 2000 மாணவர்களும், வாலிபர்களும் பழமையடைந்த கல்வி முறையை எதிர்த்து ஊர்வலம் நடத்தினர். அவர்களது தலைமை அலுவலகமாகவுள்ள - அவர்களால் கைப்பற்றப்பட்ட கட்டடத்திலிருந்து புறப்பட்ட ஊர்வலத்தினர் செங்கொடிகளைத் தாங்கியவண்ணம் நகரத்தின் மத்திய பகுதியினூடாகச் சென்றனர். அவர்கள் ''ஏகாதிபத்தியம் ஒழிக!'' 'கிளர்ச்சி செய்வதற்கு எங்களுக்கு உரிமையுண்டு' முதலான கோஷங்களைக் கோஷித்தனர்.

பிரஞ்சு மக்களின் போராட்டத்தை ஆதரித்து 1000க்கு மேற்பட்ட தொழிலாளர்களாலும் மாணவர்களாலும் ஜூன் 6-ந் திகதி ஸ்டாக்ஹோமில் ஒரு ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடாத்தப்பட்டது. ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்ட சுலோக அட்டைகளில் ''முதலாளித்துவம் ஒழிக!'', ''தொழிலாளர்களும் மாணவர்களும் ஐக்கியப்படுங்கள்!'', ''பாரிஸ் கம்யூன் நீடூழி வாழ்க!'' ''தொழிலாளர்களுக்கே அதிகாரங்கள்!'' போன்ற கோஷங்கள் காணப்பட்டன. ஊர்வலத்தில்சென்ற சிலர் தலைவர் மாஓவின் படங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டும், தலைவர் மா சே-துங் மேற்கோள்கள் எனும் சிகப்புப் புத்தகத்தை அசைத்த வண்ணம் ''தலைவர் மாஓ நீடூழி வாழ்க!'' என்று கோஷமிட்டுக் கொண்டும் சென்றனர்.

### மாசே-துங் சிந்தனை



**மாணவர் இயக்கம் முழுமையான மக்கள் இயக்கத்தின் பகுதி. மாணவர் இயக்கத்தின் எழுச்சி; சகல மக்களினதும் எழுச்சியைத் தானுகவே தூண்டிவிடும்.**

- மா ஓ

### மேற்கு ஜேர்மனியில் 65,000 மாணவர்கள் வேலை நிறுத்தம்

இந்த வருட ஆரம்பத்திலிருந்து, மேற்கு ஜெர்மன் மாணவர்கள் நலிவடைந்த கல்வி அமைப்புக்கெதிராக உறுதியாகப் போராடி வருகிறார்கள். கீழ் சக்ஸனியில் 4500 பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஜூன் 6-ந் திகதி தொடக்கம் இரண்டு நாட்கள் வேலைநிறுத்தம் செய்தனர். அதற்கு முன் மேற்கு ஜெர்மனியிலுள்ள வைத்தியத் துறை மாணவர்களும், வாழ்க்கைத் தொழில் பள்ளி மாணவர்களும் வேலை நிறுத்தம் செய்தனர்.

ஜூன் 11ல் 132 பொறியியல கல்லூரிகளிலுள்ள 65,000 மாணவர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்தையும், மிகப் பெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நடத்தினர். ஏனைய பொறியியல் மாணவர்

—10-ம் பக்கம் பார்க்க

# ஆலய பிரவேசத்திற்கு எதிராக பிற்போக்கு வாதிகளின் இறுதிப் போராட்டம்

**யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் இன்று ஆலயப் பிரவேசம் பற்றிய பேச்சாகவே இருக்கிறது. கடவுள் வழிபாட்டிற்காக சைவ ஆலயங்களுள் பிரவேசிப்பதற்கு தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று திரண்டு நடத்தும் போராட்டமும், பொதுமக்களின் உள்ளங்களைத் தொட்டுவிட்டது. தீண்டாமை எனும் கொடிய, வெறுக்கத்தக்க சமூகச் சீர்கேட்டு நோய் 1968 வது ஆண்டிலும் - அதாவது சமூகக் குறைபாட்டுத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டு பதினொரு வருடங்களுக்குப் பின்பும் - வட இலங்கையில் இறுகப் பற்றியுள்ளதை அறியும் மக்கள் திகைப்படைகின்றனர்.**

ஆலயப் பிரவேசத்தைத் தடை செய்தே தீருவோம் என கூச்சலிடும் விடாக்கண்டர்கள் புராதன வேதாகமங்களை எல்லாம் தமக்குச் சாதமாகத் திரித்தும், புரட்டியும் காட்டுவர். ஆனால், இந்து சமயத்தின் பிறப்பிடமான இந்தியாவிலேயே ஆலயப் பிரவேசத்திற்கு ஒரு விதத் தடையுமில்லை என்பதை எவரும் அறிவர். (சாதிப்பாகுபாடுகள் வேறு விஷயங்களில் இன்னும் அங்கு அரசோச்சுகின்றன) ஆனால் இந்நாட்டு இந்தப் பிற்போக்குவாதிகளான விடாக்கண்டர்களுக்கு வக்காலத்து வாங்க புதிய பிரகிருதி ஒருவர் தோன்றியுள்ளார். அவர்தான் முன்னாள் வவுனியா பாராளுமன்ற உறுப்பினரான திருவாளர் சுந்தரலிங்கம்.

சுந்தரலிங்கம் பல துறைகளில் கை வந்தவர். ஒரு காலத்தில் மத்திய மாகாணத்தில் உதவி அரசாங்க அதிபராக இருந்தபொழுது தான் சிங்கள மக்களிடையே காணப்படும் சாதிப் பிரிவுகளை ஒழிப்பதற்குப் பாடுபட்டதாக அவர் டெயிலி மிரர் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் கூறியுள்ளார். ஆனால் இன்று அவ்விஷயத்தில் அவர் ஒரு முழுக் குத்துக்கரணம் அடித்துள்ளார். ஒரு காலத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்காகக் குரல் கொடுத்தவர் இன்று அதனை பெயர்ந்து விட்டதாலோ என்னவோ சமுதாயத்தின் தனிப் பெரும் பிற்போக்குத் தத்துவத்திற்கு வக்காலத்து வாங்குகின்றார். சுந்தரலிங்கத்திற்கு இது சர்வ சகஜமான தொழில்!

## ஆதரவு அதிகரிக்கிறது

ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களால் ஆரம்பிக்கப்பட்ட வெகுஜன இயக்கத்திற்குப் பல்வேறு பகுதிகளிலிருந்தும்—எதிர்பாராத இடங்களிலிருந்தும் பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. இந்நாட்டு முதலாளித்துவப் பத்திரிகைகள் சாதிக் கொடுமைகளைப் பொதுவாகக் கண்டித்தே வந்திருக்கின்றன. என்றாலும், உழுத்துப்போன வேறு ''இலட்சியங்களுக்காக'' உக்கிரமாகப் போராடுவது போல் இந்த விஷயத்தில் இப்பத்திரிகைகள் குரல் எழுப்பவில்லை என்பது வாஸ்தவமே. கும்பகர்ணத் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் இந்து சமய ஆலோசனைக் குழு கூட தனது ஆழ்ந்த உறக்கத்திலிருந்தும் சற்றுத் திடுக்கிட்டு விழித்து இந்த விஷயத்தில் பிரதமரையும் பேட்டி கண்டு, பேட்டி கண்ட படத்தையும் படாடோபமாகப் பத்திரிகைளில் பிரசுரித்தது. இப்படி ஒரு குழு இருப்பதாக மக்கள் அறியாதளவுக்கு இதில் உள்ள 'பிரமுகர்கள்' தூங்கி வழிகின்றனர்.

பிரதமரும் தன்னைப் பொறுத்தளவில் அறிக்கைகள் விடுகின்றார். மக்கள் யாவரும் தடையின்றி ஆலயங்களில் பிரவேசிக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்ற பாட்டையே திருப்பித் திருப்பிப் பாடுன்கிறார் பிரதமர். ஆனால் நாம் இவரைக் கேட்கின்றோம். ''நீர் என்ன நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றீர்?'' தாழ்த்தப்பட்ட மக்கள் இதற்கான விடையையே எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றனர். பிரதமர் வெறுமனே அறிக்கைகள் மட்டும் தான் விடுகிறார். ஆனால், யாழ்ப்பாணத்திலோ, பொலிஸார் கோயிலுக்கு வெளியே சும்மா கை கொட்டிக்கொண்டு நிற்கின்றனர். துரைசாமிக் குருக்களின் குண்டர் படை தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளே பிரவேசிக்க விடாமல் தடுக்கின்றது. இது மட்டுமா, தனது கோயில் விவகாரங்களில் தலையிட்டால் உம்மை யாழ்ப்பாணத்தை விட்டே இடமாற்றம் செய்விப்பேன் என்று பொலிஸ் சுப்பிரிண்டனை வெருட்டும் அளவுக்கு. துரைசாமிக் குருக்கள் வெறியாடுகின்றார். பிரதமர் பதவிக்குக்கூட உலைவைக்கும் அளவுக்கு இவரது சக்தி பரந்திருந்தாலும் நாம் ஆச்சர்யப்படமாட்டோம். மாவட்ட சபை மசோதா வராததற்காக அரசாங்கத்தை விட்டு வெளியேறுத சமட்டியினர் மாவிட்டபுரம் குருக்களுக்காக வெளியேறி பிரதமரை ஆட்டிவைக்கவும் கூடும். ''மாவைக் கந்தனின் சேவல் கொடி'' பறக்க வேண்டிய ஆலயகோபுரத்தின் உச்சியில் செல்வநாயகத்தின் ஆவல் கொடியான தமிழரசுக் கொடியைப் பறக்கவிட்டவரல்லவா துரைசாமிக் குருக்கள்!

## பொலிஸாரின் போக்கு

இத்தகைய பின்னணியில், பொலிஸார், வழிபாடு செய்ய வருவோரை சட்ட விரோதமான முறையில் தடுத்துத் துடுக்குத்தனம் செய்யும் குண்டர் படையைக் கலைக்கத் துணிவார்களா? ஆனால், வேலைநிறுத்தங்களின்போது இதுபோன்றதொரு நிலையில் பொலிஸார் நடந்துகொள்ளும் முறை யாவரும் அறிந்ததே. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குள் நுழையும் கருங்காலிகளைமறிக்கும்போது, பொலிஸ் படையினர் புலிபோல் பாய்ந்து, மறிப்போரை அப்புறப்படுத்தி, கருங்காலிகள் ஆபத்தின்றிச் சுலபமாக உள்ளே செல்ல வழி வகுத்துக் கொடுப்பார்களே! வேலைநிறுத்த வரலாற்றில் இப்படி எத்தனையோ முறை நடந்துள்ளது. பொலிஸாரின் வாகனங்களிலேயே கருங்காலிகள் தொழிற்சாலைக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்! இதனை ஆலயப் பிரவேசத்தில் ஏன் செய்யவில்லை?

ஒன்றுக் கொன்று முரணான பொலிஸாரின் இந்தக் கொள்கையும் செயல் முறையும் எதைக் காட்டுகிறது? பொலிஸ் படை என்பது முதலாளிகள், பிற்போக்குக் கும்பல்கள் ஆகியோரின் நலன்களை விசுவாசத்துடன் பாதுகாக்கும் காவல் நாய்களே அன்றி, இவர்கள் பொது மக்களின் காவலர்கள் அல்ல, அவர்களின் சேவகர்களுகமல்ல என்பதைத்தான்.

இதனை உணர்ந்ததனாலேயே தாழ்த்தப்பப்பட்ட மக்கள் தமது பலத்தையே நம்பி, ஒன்று திரள்கின்றனர், பிரதமர், பொலிஸ் போன்றவர்களின் ஆசை வார்த்தைகளில் நம்பிக்கை வைக்காமல், மக்களின் எண்ணிக்கையிலும், ஆற்றலிலும், பலத்திலும் முழு நம்பிக்கை வைத்துள்ளனர். இவர்களின் ஒன்று திரண்ட மக்கள் இயக்கமே இதுவரை தூக்கத்திலிருந்த பிரதமர், பொலிஸ் மற்றும், ''பிரமுகர்களை'' விழிப்படையச் செய்துள்ளது. இதுவே, மக்கள் இயக்கத்தின் முதல் வெற்றி என்பதை தாழ்த்தப்பட்ட மக்களும் அனுபவ ரீதியாக அறிந்து கொண்டனர்,

## வட பகுதி எம். பி. க்கள் மௌனம் ஏன்?

இன்னொரு பெரும் கேள்வியையும் மக்கள் எழுப்புகின்றனர். வட-பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்கின்றனர்? இவர்கள் ஆலயப் பிரவேசத்தை ஆதரிக்கின்றார்களா, எதிர்க்கின்றார்களா? இவர்கள் தமது ''பொன்'' வாயை ஏன் திறக்கவில்லை? தாழ்த்தப்பட்ட மக்களை மாவிட்டபுரத்திற்கு அழைத்துச் சென்று, அங்குள்ள குண்டர்களின் எதிர்ப்புக்கு முகம் கொடுத்து ஆலயப் பிரவேசத்தை ஏன் நடத்தி வைக்க முன்வரவில்லை? முக்கியமாக காங்கேசன் துறைப் பாராளுமன்ற உறுப்பினரும் சமட்டித் தலைவருமான திரு. செல்வநாயகத்தார் என்ன செய்கின்றார்? மாவட்ட சபை போராட்டத்தில் குப்புற விழுந்ததினால் ஓய்வாகக் கிடக்கும் ''ஃபாதர்'' செல்வநாயகம், உள்ளூரில்—தனது சொந்தத் தொகுதியிலேயே உள்ள மாவிட்டபுரப் பிரச்சினையை ஆகுதல் வெற்றிகரமாகத் தீர்த்து வைக்கலாமே என தமிழ் மக்கள் எண்ணுகின்றனர். அவர் பாவம், எப்படித் தீர்ப்பார். அடிக்கடி கோட்டடிக்குப் போவதில் கோட்டுப் புலி என புகழ்பெற்ற துரைச்சாமிக் குருக்கள், செல்வநாயகத்தின் ''அபிமான வாடிக்கைக்காரராச்சே! அத்துடன் தேர்தல் காலங்களில் ''முருகப் பெருமானின்'' சேவற்கொடிக்குப் பதில் செல்வநாயகத்தின் கட்சிக் கொடியைக் கோபுர உச்சியில் கட்டி தனது விசுவாசத்தை அம்பலப்படுத்தின குருக்கள் அல்லவா? முருகனின் சேவற் கொடியைக் காட்டிலும், தனது வர்க்கத்தின் தலைவனை செல்வநாயகத்தின் கட்சிக் கொடியே தஞ்சம் என தவம் கிடக்கும் குருக்களுக்கெதிராக ''உண்மைக் கிறிஸ்தவரான'' செல்வநாயகம் போர் தொடுப்பாரா?

## தேர்தல் கணக்கு

தாழ்த்தப்பட்ட மக்களின் இன்றையக் கிளர்ச்சி யாழ்ப்பாணத்தில் உள்ள சகல அரசியல் கட்சிகளின் உண்மைச் சொரூபத்தையும் நன்கு அம்பலப்படுத்திவிட்டது. சமசமாஜ கட்சி, கெனமன் திரிபுவாதக் கும்பல் ஆகிய இடதுசாரி வேடதாரிகளும் அம்பலமாகிவிட்டனர். ஆக, மார்க்சிஸ—லெனினிஸச் செம்பதாகையைப் பிடித்துக்கொண்டு வீறு நடைபோடும், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சரியான பாதையைக் காட்டுகிறது. இப் பிரச்சினையில் தலையிட்டால் அடுத்த தேர்தலில் தமக்குக் கிடைக்கும் வோட்டுக்களில் நஷ்டம் ஏற்படும் என்று தேர்தல் கணக்குப் போடும் அரசியல் கட்சிகள் ஒதுங்கி நின்று தப்புவதற்கு முயல்கின்றன. பாராளுமன்றச் சந்தர்ப்பவாதம் எவ்வாறு ஒருவனைப் படுகுழிக்குள் வீழ்த்துகின்றது என்பதை இங்கே காண்கின்றோம்.

> **மனமாற்றத்தால் நடக்காது! சுந்தரலிங்கம் ஓர் அத்தாட்சி**
>
> **உயர் சாதியினர் மனம் மாறி உரிமைகளைத் தருவார்கள் என்ற ஏமாற்றுப் பொய்த்து விட்டதையும் சிறுபான்மைத் தமிழர் உணர்ந்து கொண்டனர். 1947-ம் ஆண்டு சகல மக்களுக்கும் ஆலயத்தைத் திறந்து விட வேண்டும் என்று சட்டமியற்ற முயற்சித்த போது, தான் அதை எதிர்த்ததாக சுந்தரலிங்கம் தினகரன் பேட்டியில் கூறியுள்ளார். அன்று ஆலயப் பிரவேசத்தை எதிர்த்த அவர் இன்றும் எதிர்க்கின்றார். இருபது வருடங்கள் மனதில் எவ்வித மாற்றத்தையுமே ஏற்படுத்த வில்லையே! சுந்தரலிங்கம் போன்ற மெத்தப் படித்தவர்களின் மனம்மாறவில்லை என்றால் மற்றவர்கள் எம்மட்டு? ஆகவே மனமாற்றத்தால் அல்ல, போராட்டத்தால் மட்டுமே உரிமைகளைப் பெறலாம் என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்து கொண்டனர்.**

பாராளுமன்றத்தில் கண் வைக்கும் கெனமன் கூட்டம் ஒருபுறமிருக்க, இவர்களில் ஒருவரும், தாழ்த்தப்பட்ட மக்களால் பின் தொடரப்படாத ''தலைவரு''மான திரிபுவாதி எம். சி. சுப்பிரமணியம் மேலும் ஒருபடி சென்று பிரதம குருக்களின் முழு ஆசியுடன்தான், தானும் தனது சகாக்களும் ஆலயப் பிரவேசம் செய்வார்கள் என அறிக்கை விட்டார். ஆனால் பரிதாபம், இவன்ரி பேச்சைக்கேட்க தாழ்த்தப்பட்ட மக்கள் எவ

10-ம் பக்கம் பார்க்க

## ஏன்?

**"மாருதப்புரவி வல்லி உண்டாக்கிய கோயில் என்று சரித்திரம் காட்டும் துரைசாமிக் குருக்களே இப்போது உமது சொந்தக் கோயில் என்று மார்தட்டுவது ஏன்?**

### மக்களின் அத்தியாவசியப் பொருட்களுக்கு பணமில்லையாம்

# பந்தய குதிரைகளை இறக்குமதி செய்ய 15 லட்சம் ரூபாய் அனுமதி

இன்னும் ஆறு மாதத்திற்குள் நூறு பந்தயக் குதிரைகள் இலங்கைக்கு வரப்போகின்றன. இவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஒரு ஸ்தாபனம் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாகத் தெரியவருகிறது. நாட்டில் மீண்டும் குதிரைப் பந்தயம் ஆரம்பமாகும் என்பதற்கு இது ஓர் அறிகுறியாகும் என அதிகார பூர்வமான வட்டாரங்கள் நம்புகின்றன.

15 லட்சம் ரூபா பெறுமதியான இந்தக் குதிரைகளை இறக்குமதி செய்ய அரசாங்கம் வெளிநாட்டுச் செலாவணி வழங்கியுள்ளது.

அந்த ஸ்தாபனம் இறக்குமதி செய்ய இறக்கும் குதிரைகளை வைத்துக் கொண்டு காலியிலும், நுவரேமியாவிலும் குதிரைப் பந்தயங்களை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிகிறது. எக்கலையில் குதிரைப் பந்தய மைதானம் ஒன்றை அமைப்பது பற்றியும் ஆலோசித்து வருகிறது. சேர் ஆர்தர் ரணசிங்கா தலைமையில் நியமிக்கப்பட்ட வரிவிதிப்பு கமிஷன் குதிரைப் பந்தயத்தைச் சட்ட பூர்வமாக்க வேண்டும் என தனது அறிக்கையில் சிபார்சு செய்தது தெரிந்ததே!

நாட்டில் எத்தனையோ பிரச்சினைகள். ஆனால் அரசாங்கம் குதிரைப் பந்தயத்தைப் பற்றிச் சிந்திக்கிறது. தங்கள் நல்வாழ்வுக்கு சுவீப் டிக்கட்டிலும் குதிரைப் பந்தயத்திலும், சூதாட்டிலும் நம்பிக்கை வைக்க மக்கள் சதா தூண்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்!

இது ஒருபுறமிருக்க, சாதாரண மக்களின் அன்றாட அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கும் ஏனைய பாவனைப் பொருட்களுக்கும் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசாங்கமோ, அந்நியச் செலாவணி நெருக்கடியினால் இவற்றைச் போதியளவு இறக்குமதிசெய்ய முடியவில்லை என சாட்டுச் சொல்கிறது. ஆனால் இந்த யு. என். பி. அரசாங்கம் தன் வர்க்கத்திற்குத் தேவையான சாமான்களுக்கு வேண்டியளவு அந்நியச் செலவாணி வழங்குகிறது. இப்போது குதிரைகளுக்குப் பதினைந்து லட்சம் ரூபா வழங்கியுள்ளது.

## ஹோப் கப்பலில் 'இரும்பு பசு'

# புளுகுப் பிரச்சாரம் அம்பலம்

கொலைகாரஅமெரிக்கரின் விஷமக் கப்பல் ஹோப் யு. என். பி. ஆட்சியின்உதவியுடன் இங்கு நுழைந்துவிட்டதல்லவா? இக் கப்பலை வரவேற்று, உடுக்கடித்த டட்லியார் உளறியதை 16-4-68ந் தேதி டைம்ஸ் ஒஃப் சிலோன் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது. ''ஹோப் கப்பல் அதிகாரிகள்' தம்முடன் 'இரும்புப் பசு' ஒன்றையும் கொண்டு வந்தமைக்கு அவர் (டட்லி) தனது நன்றியைச் செலுத்தினார். இப் 'பசு' சுமார் 2,500 பசுக்கள் தரும் பாலைத் தரவல்லது'' இப் பசுவின் சாதனை பற்றிக் குறிப்பிட்ட ''சன்'' பத்திரிகை ''இரும்புப் 'பசு' எனும் இயந்திரத்தினுள் கடல் நீரையும் கொழுப்புக்களையும் உலர்ந்த பாலையும் இட்டு, பசுப்பால் தயாரிக்கப்படுகின்றன'' என பிரமாதப்படுத்தியது.

உண்மை என்ன? இன்றுவரை இந்த ''இரும்புப் பசு'' இயந்திரத்தைக் கப்பலில் கண்டவர்கள் யாருமில்லை. இதன் படமோ, விவரமோ, இன்றுவரை இலங்கைப் பத்திரிகைகளில் ஒன்றிலாவது வரவில்லை. கப்பலில் சகல அம்சங்களையும் பார்வையிடவும், ஆராயவும் சென்ற இலங்கை டாக்டர்கள், விஞ்ஞானிகள் ஆகியோரைக் கேட்டபோது, அப்படி ஒன்று கப்பலில் இல்லையென்றும், சாதாரண கெயமா பால் பவுடர் போன்ற பவுடரையே பெருமளவில் கலந்து நோயாளிகளுக்குக் கொடுக்கின்றனரேயன்றி வேறு புதுமையான இயந்திரம் அங்கு இல்லை என்றும் சொல்கிறார்கள்.

கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்கு என்பார்கள். டட்லியார் உடுக்கடித்தாலும் எத்தனை நாளைக்கு இந்நாட்டு மக்களை ஏமாற்ற முடியும்?

விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி மிக அரிதான நாடுகளில் பேய்க்காட்ட உருவாக்கப்பட்ட ''இரும்புப் பசு'' இங்கு தலைகாட்ட முடியவில்லை. ஐயோ விஞ்ஞானமே, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கையில் சிக்குண்டு சோரம் போகின்றாயே!

# நீயும் அந்தப் படையில் சேர்!

-அரியாலையூர் மோசேஸ்-

தெருவினிலே நடந்து சென்று திரும்பி நின்று
திக்கெங்குங் கண்ணெறிந்து துழாவிப் பார்த்தால்
தெரிகின்ற மாடங்கள் கோபுரங்கள்
திருக் கோயிற் றலங்களாக விருக்குமன்றி
சிறுமை தரு கொள்கைகளை வேரறுத்துச்
சனத்திடையே சமத்துவத்தை நிலைநிறுத்தும்
பெருமைதரு சங்கங்க ளாகமட்டும்
பெயர் பொறிக்கக் காணயப்பா அவற்றின் கண்ணே!

ஆலயத்தை எழுப்பி வைத்தா னெவனோ ஒருவன்
ஈங்குள்ள ஒரு சிலரோ வரிந்து கட்டி
ஆலயத்தின் கதவுகளை இழுத்துப் பூட்டி
ஆகமத்தை எடுத்தோதி வேறுமேதோ
நூல்களிலே உள்ளவற்றை அடித்துக் கூறி
''நீ நீண்டான் வெளியே போ'' இவ்வாறெல்லாம்
காலமோடும் வேகத்தைக் கணித்திடாமற்
கதைக்கின்ற இவர்க்கென்ன சாபக்கேடா?

ஒரு சாரார் காலமெல்லாம் எம்மவர்க்கு
இழைத்துவரும் சொல்லொணாத அநீதிகளை
இறைவனெனப் பெயரைத் தாங்கு மவ்வொருத்தன்
ஆலயத்துள் வீற்றிருந்து காண்பானயின்
இருள் படிந்த இதயமுள்ள இவர்களோடு
உறவெனக்கு வேண்டாமென்று தனக்குளெண்ணி
வெறுப்படைந்து எப்பொழுதோ குடிபெயர்ந்து
வெந்தணலில் வீழ்ந்துயிரை விட்டிருப்பான்.

நெரிவுநிறை சனத்திரளை நெருங்கிச் சென்று
நீயுனது காதுகளைத் தீட்டிக் கொண்டால்
''உரிமையிலை உனக்கிங்கே போ வெளியே''
என்கின்ற சொற்களையே நேரிற் கேட்பாய்;
அருமையான எண்ணமுள்ள எம்மவர்க்கு
இத்தகைய அநீதி வர யாங்கள் மட்டும்
பொறுமையுட னிருந்துவிட்டாற் போதாதப்பா
புறப்பட்டு நீயுமந்தப் படையிலே சேர்.

## ஆலயப் பிரவேச . .

◎ 9-ம் பக்கத் தொடர்

ருமே இல்லை, சுப்பிரமணியத்தின் சமாதான சகஜீனம்— மாஸ்கோ படிப்பித்த பாடம் இந்தளவுக்கு வளர்ந்து விட்டது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் சரியான கொள்கையைக் கடைப்பிடிப்பதற்குக் காரணம், இக் கட்சி அடுத்த பாராளுமன்றத் தேர்தலைத் தனது குறிக்கோளாகக் கொள்ளாததே. இதனால் அது சரியான கொள்கையைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிரந்தரமாக ஆறுதலையளிக்கத் தகுந்த வழியைக் காட்ட முடிகின்றது. தீண்டாமைக் கொடுமையையும், சாதி ஒடுக்கு முறையையும் ஒழித்துக்கட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்துகின்ற போராட்டத்திற்கு முழு ஆதரவையும், ஊக்கத்தையும், துணிவையும் கொடுப்பது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியே. அதே வேளையில், சமுதாயத்தில் உண்மையான சமத்துவத்தைப் பெறவேண்டுமானால் இச் சமுதாய அமைப்புப் புரட்சிகரமாக மாற்றப்பட்டு, சுரண்டலற்ற ஒரு புதிய சமுதாயம் வேண்டுமெனவும். இதனை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சிகர அரசாங்கத்தினால்தான் சாதிக்க முடியுமெனவும், அவர்களுக்கு எடுத்துச் சொல்ல கம்யூனிஸ்ட் கட்சி தவறவில்லை.

# செங்கொடிச் சங்க

## தொழிலாளிக்கு ரூபாய் 1800 கிடைத்தது

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த ''ஃபெயர் பீல்ட் ரப்பர் 'தோட்டத்தின் நிர்வாகிகள் அங்கு இந்த எமது செங்கொடிச் சங்கத்தை அங்கீகரிக்க வேண்டும் என கோரி தோட்டத் தொழிலாளர்கள் 1964 ஜூலையில் வேலைநிறுத்தம்செய்தனர். இதில் தொழில் திணைக்களம் தலையிட்டு தொழிற் கோட்டின் மூலம் பிரச்சினை தீர்க்கப்படுமென உறுதி கூறிய தன் பேரில் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. ஆனால் தோட்டக் கமிட்டியின் செயலாளர் தோழர் பியசேன, மற்றும் சிரிவர்தன, கருணாரத்தின, ஆபிரகாம் ஆகிய முன்னணித் தோழர்கள் அநியாயமாக வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

இப்பிரச்சினை இரத்தினபுரி தொழிற் கோட்டில் எடுக்கப்பட்டது. சங்கத்தின் சார்பில் வழக்கறிஞர் கே. வைகுந்தவாசன் வாதாடினார். தொழிலாளர் நால்வருக்கும் திரும்பவும் வேலைகொடுக்க வேண்டும் எனவும், வேலைநீக்கம் செய்யப்பட்ட நாள் முதல் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சம்பளப் பாக்கியாக ஆளுக்கு ரூ. 1800/- கொடுக்கப்பட வேண்டும் எனவும், அத்தொழிலாளர்களின் சேவை, தொடர்ச்சியாக அவர்கள் வேலைசெய்தவர்கள்போல் கணிக்கப்பட வேண்டும் எனவும் தீர்ப்புக் கூறப்பட்டது. சங்கத்தின் வழக்குச் செலவு ரூ. 400 கொடுக்கப்படவேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

## உலகெங்கிலும் . . .

◎ — 7-ம் பக்கத் தொடர்

கள் இரண்டு வாரங்கள் வேலை நிறுத்தம் செய்வதாக அறிவித்த அதே சமயத்தில் பவேரியா, வட றைன் — வெஸ்ட் பேலியா பொறியியல் மாணவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்கம் செய்வதாக அறிவித்தனர்.

மியூனிச்சிலுள்ள 400 சரீரவியல், விளையாட்டு மாணவர்கள் ஜூன் 11-ந் திகதி தாங்கள் கற்பதற்கு தடையாக இருக்கும் வருந்தத்தக்க நிலைமைகளை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தனர்.

இதே வேளையில், மேற்கு பெர்லினிலுள்ள 4 பொறியியல் கல்லூரிகளிலுள்ள ஆயிரம் மாணவர்கள் பொலிசாரது பயமுறுத்தலுக்குப் பணியாது வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் நடத்தினர்.

# பாராளுமன்றம் ஜெக்பொட் போன்றது அதைத் தூக்கி எறிய வேண்டும்

## வட வியட்நாம் ஆதரவு கூட்டத்தில் வழக்றிகஞர் திரு. கரவிட்ட

**1956ம்** ஆண்டு இலங்கையில் ஏதோ ''ஒரு புதிய மாற்றத்தை உண்டாக்கி விட்டதாகக் கருதினேம். எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் ஆட்சி வந்தது. அந்த ஆட்சியை முறியடிக்கும் மும்முரமாகப் பாடுபட்ட ஏகாதிபத்தியவாதிகள் பண்டாரநாயக்காவைச் சுட்டுத்தள்ள காரணமாக இருத்தனர். பண்டாரநாயக்கா இறந்த பின் இன்னெரு பண்டாரநாயக்கா ஆட்சி வந்தது. அதன். பின் மார்க்சிஸ வாதிகள் என்று கூறிக் கொள்பவர்களுடன் இணைந்த ஒருகூட்டு ஆட்சி வந்தது. இவர்களால் எல்லாம் எதைத்தான் சாதிக்க முடிந்தது? எந்த ஆட்சியையும் தொடர்ந்து நீடித்துக்கொண்டு செல்ல முடியாதுபோய் விட்டது. இந்தப் பாராளுமன்றத்தின் போக்கு இதுதான். பண்டாரநாயக்காவின் கொள்கைகளைக்கூட செயல் படுத்த வேண்டுமானுல் கூட ஒரு புரட்சி நிச்சயமாய் நடக்கத்தான் வேண்டும். இதை பண்டாரநாயக்காவின் கொள்கைகளை ஆதரிக்கும் சகல மக்களும் நன்கு உணர வேண்டும்.''

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சென்ற 20 திகதி செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடத்திய வியட்நாம் ஆதரவுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய கம்பஹா பாராளுமன்ற பிரதிநிதி தோழர் எஸ். டி. பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு முன் கொம்பனித்தெரு டிமெல் பார்க்கிலிருந்து புறப்பட்ட ஊர்வலத்திற்கு தோழர்கள் என். சண்முகதாசன், எஸ். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் தலைமை தாங்கி வந்தனர். சென்ற மாதம் நடந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 25 வது ஆண்டு விழாவின் போது தோழர் என். சண்முகதாசன், நாங்கள் தத்துவ ரீதியில் பிரிந்த பின் பல கூட்டங்களையும் ஊர்வலங்களையும் தனிப்பட நடத்தியுள்ளோம். திரிபுவாதிகளால் ஒரு ஊர்வலத்தை யாவது தனித்து நடத்த முடியவில்லை'' என்று குறிப்பிட்டதை திரும்பவும் நிரூபிப்பது போல இந்த ஊர்வலம் அமைந்திருந்தது.

தொடர்ந்து பேசிய தோழர் எஸ். டி. பண்டாரநாயகா, ''இன்று வியட்நாமில் அமெரிக்க ஆக்ரமிப்பாளர் நடத்தும் கேவலமான, நீசத்தனமான இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து முற்போக்கு சக்திகள் அனைத்தும் வியட்நாம் மக்களுக்கு ஆதரவு காட்டி நிற்கின்றன. வியட்நாமில் நடக்கும் இந்தப் போராட்டம் எங்களுக்குப் படித்துத் தரும் ஒரு மிக முக்கிய பாடம், எந்த ஒரு நாடும் சுதந்திரம் பெறுவதானுல் அது போராட்டத்தின் மூலமாக பெற்றதாகவே இருக்க வேண்டும்; அப்போது தான் அது நிரந்தரமானதும், உண்மையானதுமாய் இருக்கும் என்பதாகும்'' என்றும் குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தில் வழக்கறிஞர் எச். எல். ஆர். கரவிட்ட பேசும்பொழுது, இன்று வியட்நாம் போராட்டம் கால் நூற்றுண்டு காலமாக நடைபெறுகின்றது. 1945ம் ஆண்டிலிருந்து 1954ம் ஆண்டு வரைக்கும் பிரஞ்சு ஏகாதிபத்தியத்திற்கும், அதன் பிறகு இன்று வரைக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக இந்தப் போராட்டம் நடந்து வருகின்றது. 1954ல் ஏழு நாடுகள் கூடி ஏற்படுத்திய ஜெனீவா ஒப்பந்தம் பிரஞ்சு ஏகாதிபத்தியம் வெளியேற வேண்டும் என்று கூறினுலும், பிரஞ்சு ஏகாதிபத்தியத்திற்குப் பின் அமெரிக்கா தென் வியட்நாமை ஆக்கிரமித்துக் கொண்டது. அங்கு டியம் என்ற படு பிற்போக்கு வாதியை தங்களின் கைப் பொம்மையாக வைத்துக் கொண்டார்கள். அங்கு அமெரிக்க, அவுஸ்திரேலிய கூலிப்பட்டாளங்கள் நிறைந்த நின்று வியட்நாம் மக்களைத் தாக்குகின்றன. ஆனுல் வெற்றி வியட்நாம் மக்கள் பக்கம் தான் இருக்கிறது. வியட்நாம் மக்கள், அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக மட்டுமல்ல, முழு உலக முதலாளித்துவத்திற்கும், ஏகாதிபத்திய வாதத்துக்கும் எதிராகப் போராடுகின்றனர் என்ருர்.

அவர் மேலும் பேசியதாவது: இன்று வியட்நாம் பிரச்சினைக்கான ஒரே தீர்வு அமெரிக்கா வியட்நாமை விட்டு முற்று முழுதாக வெளியேறி வியட்நாம் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையைக் கொடுப்பது ஆகும். எந்த சமாதான உடன்படிக்கையாலும், ஒப்பந்தங்களாலும் இதைச் செய்ய முடியாது. இதைத்தான் வியட்நாம் போராட்டம் எமக்குக் கற்றுத் தருகின்றது. 1948 ம் ஆண்டு எமது நாடு சுதந்திரம் பெற்றதாகக் கூறிக் கொள்கின்ருேம். ஆனுல் சுதந்திரம் பெற்றதாக கூறிக் கொள்ளும் எமது நாட்டு கட்டுநாயகா, திருகோணமலை ஆகிய இடங்களிலிருந்து வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளை போகச் சொல்லி முடிந்ததா? அதற்கும் திரும்ப ஓர் ஒப்பந்தம் எழுதும் நிலைதானே ஏற்பட்டது. 1956 ம் ஆண்டு பிற்போக்கு யு. என். பிக்கு சவக்குழி தோண்டிவிட்டதாகச் சொன்னுர்கள். யு. என். பி. என்ற சவத்தின் நெஞ்சில் கடைசி ஆணியை அறைந்துவிட்டதாகச் சொன்னுர்கள். ஆனுல் 1965 ம் ஆண்டு அந்த யு. என். பி. திரும்பவும் உயிர்ப்பெற்று எழுந்ததே, இது எப்படி? இதனுல்தான் ஒப்பந்தம் எந்தவித சுதந்திரத்தையும் அளிக்காது என்று கூறினேன். ஜெனீவா ஒப்பந்தம் எந்த பலனையும் அளிக்காததன் மூலம் இதைத்தான் வியட்நாம் எமக்குப் படிப்பிக்கின்றது.

பாராளுமன்றம் என்பது ஒரு ''ஜாக்பொட்'' யந்திரத்துக்குச் சமம். ஜாக்பொட் யந்திரத்தை வைத்திருப்பவனின் நன்மைக்காகத்தான் அது உண்டாக்கப்பட்டுள்ளது. இதைப் போல்தான் பாராளுமன்றமும். முதலாளித்துவ அமைப்புகள் தங்கள் லாபத்துக்காக உண்டாக்கிக்கொண்ட ஜாக்பொட் யந்திரமாகிய இந்த கேவலமான முறையைக் கடலில் தூக்கி யெறிந்த அன்று தான் எமக்கு விமோசனம் கிடைக்கும்.

வியட்நாம் எமது மக்களுக்குப் படிப்பிக்கும் இன்னெரு பாடம், சிங்கள மக்கள் சகல ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை மக்களுடனும் இணைந்து நிற்பதன் மூலம்தான் தமது போராட்டத்தில்வெற்றி காண முடியும் என்பதாகும். வியட்நாம் மக்கள் சகலரும் ஜாதி மத, இன, குல பேதமின்றி இப் போராட்டத்தில் இணைந்து நிற்கின்றனர். எமக்கு மாத்திரம் ஏன் அது முடியாது? ஒரு மார்க்சியவாதி அல்லது ஒரு புரட்சிவாதி சிறுபான்மை மக்களின் நியாயமான உரிமைகளை ஆதரிக்க வேண்டியது மட்டுமல்லாது, அற்வறிற்காக போராடவும் முன்வரவேண்டும். அப்படி இல்லாவிட்டால் சிறுபான்மை மக்களை நாங்களே பிற்போக்கு

12-ம் பக்கம் பார்க்க

# மலையகத்து வாலிபர் மாநாடு

◎ 3-ம் பக்கத் தொடர்

போடும் பாராளுமன்றத்தின் மூலம் கிடையாது. முதலாளித்துவ அரசு யந்திரத்தை அடித்து நொருக்குவதன் மூலம் தான் கிடைக்கும் என்று மார்க்சிஸ்ட் - லெனினிஸ்டுகள் சதாகாலமும் நம்பி வருகின்றனர். முதலாளி வர்க்கத்தின் காவல் நாய்களின் கைகளிலிருந்து துப்பாக்கிகள் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் கைகளுக்கு மாறும்பொழுது பொது ஜனங்களுக்கு உண்மையான விமோசனமும் கிடைக்கும். அதனுல்தான் தோழர் மா சே-துங் அவர்கள், அரசியல் அதிகாரம் **துப்பாக்கிக் குழாயிலிருந்து பிறக்கிறது**'' என்று கூறியுள்ளார் என தோழர் சண்முகதாசன் குறிப்பிட்டார்.

### இறுதியில் வெற்றி பெவறுது மக்கள்தாம்

''எமது எதிரிகள் பலம் வாய்ந்தவர்கள். புரட்சிகரப் பாதை நீண்ட பாதை, கடினமான பாதை. நாம் இறுதி வரை உறுதியுடன் போராட வேண்டும். வெற்றி பெரும் வரை சகல இன்னல்களையும் தாண்டிச் செல்ல வேண்டும். நவீன திரிபுவாதம், ட்ரொஸ்கியவாதம் ஆகிய நச்சுப் பூண்டுகளை தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் இருந்து தத்துவார்த்த ரீதியில் தூக்கி யெறிந்து அவற்றிற்குப் பதிலாக மா சே-துங்கினது புரட்சிகர எண்ணங்களை நிலை நிறுத்த வேண்டிய கஷ்டமான கடமை எமக்கு முன்னுல் உள்ளது. சிங்கள விவசாயிகள் மத்தியிலும், இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் மத்தியிலும் உறுதியான ஐக்கியத்தை உருவாக்க வேண்டிய கஷ்டமான தானுலும் அவசியமான கடமையும் எமக்குள்ளது. இப்பேர்ப்பட்ட ஐக்கியம் இல்லாமல் இலங்கையின் புரட்சி ஒரு போதும் வெற்றி பெற முடியாது'' என்று தோழர் சண்முகதாசன் எச்சரித்தார்.

''இன்று பிற்போக்கு சக்திகள் பலம் வாப்ந்தனவாகக் காணப்பட்ட போதிலும் அவை அழிந்து போகின்ற சக்திகள். அவை இன்று பயங்கரமானவையாகக் காட்சியளித்த போதிலும் நீண்டகால நோக்குடன்பார்க்கும்பொழுது அவை வெறும் கடதாசிப் புலிகளே. இறுதியில் வெற்றி பெறுவது மக்கள்தான். அவர்கள்தான் உண்மையில் பலம் வாய்ந்தவர்கள்.

### மாசே-துங் சிந்தனை ஒளிக்கதிர்கள்

உள்நாட்டுப் பிற்போக்குவாதிகள் உலக ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்கினதும் ஆதரவைக் கொண்டுள்ள போதிலும் அவை அழிந்துபோகும் சக்திகள். ஆனுல் உலகனைத்திலும் உள்ள புரட்சிகர சக்திகள் நாளுக்கு நாள் பலம்பெற்று வருகின்றன. எழுபத்து ஐந்து கோடி சீன மக்களின் புரட்சிகர ஆதரவு எமக்கு உண்டு. சீனப் பாடலொன்று கூறுவது போல்,

கிழக்கு சிவக்கின்றது,
செங்கதிரோன் எழுகின்ருன்
சீனுவில் மாசே - துங்
தோன்றுகிருர்

மாசே - துங் சிந்தனையின் ஒளிக்கதிர்கள் இன்று உலகம் யாவற்றிலும் ஊடுருவிச் சென்று விட்டன. இந்த ஒளிக்கதிர்கள்தான் இலங்கையின் புரட்சிப் பாதைக்கும் இன்று வழி காட்டுகின்றன. ஆதலினுல் நாம் மார்க்சிஸ - லெனினிஸத்திலும், மாசே-துங் சிந்தனையிலும் நம்பிக்கை கொள்ள வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சியிலும் பொது மக்களிலும் நம்பிக்கை கொள்ளவேண்டும். மாசே-துங் சிந்தனை என்னும் செம்பதாகையின்கிழ் முன்னேறிச் செல்லவேண்டும்'' என்று தோழர் சண்முகதாசன் கூறி முடித்தார்.

### தோழர் எஸ். டி. யின் பேச்சு

தென்னிலங்கைப் புரட்சிகர வாலிபர்களின் நல்லாசிகளை தோழர் எஸ். டி. பண்டாரநாயகா எம். பி. மாநாட்டுக்குத் தெரிவித்தார். ''எனது பதினேழு வருட பாராளுமன்ற அனுபவத்திலிருந்து, மக்களின் எந்த ஒரு பிரச்சினையையும் முதலாளி வர்க்கமும் சகல பிற்போக்கு வாதிகளும் மக்களை ஏமாற்றுவதற்குப் பயன்படுத்துகின்ற ஆயுதமான, வெறும் பேச்சு மேடையான பாராளுமன்றத்தின் மூலம் தீர்க்க முடியாது என்று என்னுல் கூறமுடியும்'' என்று தோழர் எஸ். டி. பண்டாநநாயகா குறிப்பிட்டார். ''மக்களின் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய ஒரேயொரு பாதை தலைவர் மாசே-துங் அவர்கள் சுட்டிக்காட்டிய பாதை. அதுதான் புரட்சிப் பாதை. சிங்கள, தமிழ், முஸ்லிம் பொது மக்கள் தமது பொது எதிரிகளான வெளிநாட்டு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அவற்றின் ஏவல் நாய்கள் ஆகியவற்றிற்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும்'' எனத் தோழர் எஸ். டி. பண்டாரநாயகா கேட்டுக்கொண்டார்.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் உதவிச் செயலாளர் தோழர் எம். சி. எம். ஷாபி சம்மேளனத்தின் அங்கத்தவர்களின் சார்பில் வாழ்த்துக்கள் தெரிவித்தார். செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் ஹிக்கொட தர்மசேன, தோழர் வ. கந்தசாமி ஆகியோரும் வேறு பல தொழிலாளத் தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

அடுத்த நாள் மழை பொழிந்து கொண்டிருந்த பொழுதிலும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வாலிபர்கள் ஆண்களும், பெண்களும் ஹட்டன் நகரின் வீதிகளுக்கூடாக ஹைலண்ட்ஸ் மகளிர் பாடசாலையை நோக்கி பொதுக் கூட்டத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் போட்ட புரட்சிகரக் கோஷங்கள் பெரும் மழையையும் பொருட்படுத்தாது அவர்கள் நடந்து சென்ற காட்சி மலைநாட்டுக்கே புத்துயிர் அளித்ததுபோல் இருந்தது. பிற்போக்கு வாதிகளை அதிர்ச்சியடையச் செய்தது. மகாநாடும் ஊர்வலமும் மலைநாட்டில் ஏற்பட்டுவரும் மாற்றத்திற்கு ஓர் அறிகுறியாய் காணப்பட்டன.

# சுந்தரலிங்கத்துக்கு முதுகு தடவுதல் ஏன்?

## 68-ல் தீண்டாமை அகில இலங்கைக்கும் அவமானம்

◎ 1-ம் பக்கத் தொடர்.

பேறித்தனம் காணப்படுவதற்குக் காரணம் என்ன? சமுகக் குறைப்பாட்டுத் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு இன்று பதினெரு வருடங்களாகின்றன. ஆனல் இந்தச் சட்டத்தை அமுல் நடத்த எந்த ஓர் அரசாங்கமும் முன்வரவில்லை. உயர்சாதியினரின் அகங்காரத்திற்கும், அட்டூழியங்களுக்கும் முன்னல் அரசாங்க அதிகாரிகளும் பொலிஸாரும் செயலற்று இருக்கின்றனர். குப்பையைக் கிளறிக் கூத்தாடுகின்ற ஊழிக்கூத்தனுகிய இவர்களது புதிய பிரதிநிதியின் சாகஸங்களுக்கு முன்னல் கைகட்டி நிற்கின்றனர்.

காலங் கடந்த சமூகத்தின் இந்தப் பிரதிநிதியைப் பொலிஸார் எதற்காகத் தடவிக் கொடுக்க வேண்டும்? இந்த மனிதர் பகிரங்கமாகவும், வேண்டுமென்றும் சட்டத்தை மீறுகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களைக் காலால் எட்டி உதைக்கின்றனர். நீதவான் போட்ட தடையைக் கூட மீறுகின்றனர். இதற்கெல்லாம் பரிகாரமாக ஆறு பொலிஸ்காரர்கள் இவரைக் காவிக் கொண்டு காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்வதும் மறுபடியும் கோயிலடியில் கூத்தாட தனிப்பட்ட முறையில் பிணையில் விடுவதும்தான் இவருக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகும்.

சம்பந்தப்பட்ட நபர் ஒரு தொழிலாளியாகவோ, அல்லது ஒரு விவசாயியாகவோ, அல்லது தாழ்த்தப்பட்ட சமுகத்தைச் சேர்ந்தவராகவோ இருந்திருந்தால் இப்படித் தூக்குக் திரிவார்களா? பொலிஸ் நிலையத்துக்கு போக மறுத்தவர் மேற்படி நபர்களில் ஒருவராக இருந்திருந்தால் பொலிஸாரின் குண்டாந்தடிகளால் மண்டைதான் நொருங்கியிருக்கும். அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப் பட்டவர் பிணையில் விடப்பட்டால் மறுபடியும் குழப்பம் விளைவிப்பார் என்று கூறி அவரைப் பிணையில் விட பொலிஸார் மறுத்திருக்க மாட்டார்களா?

பொலிஸாரின் இந்தப் பாரபட்சமான நடவடிக்கை சுந்தரலிங்கமும், அவரது குண்டர்களும் தாழ்த்தப்பட்ட மக்களை ஆலயத்திற்குள் செல்லவிடாது செய்த வழிமறிப்பை அகற்றத் தவறியது, நாம் பல தடவை கூறிவந்ததைப் போல் பொலிஸ் பிற்போக்கின் காவல் நாய் தான் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பொலிஸார் முன்னுக்கு வந்து தடை செய்யும் குண்டர்களை அகற்றி, சமூகக்குறைபாட்டுத் தடைச் சட்டத்தை அமுல்படுத்திச் சட்டபூர்வமாகக் கோயிலுக்குள் செல்ல உரிமையுள்ளவர்கலுக்கு ஆலயத்திற்குள்செல்லபாதுகாப்பு அளிப்பதன் மூலம் தமது கடமையைச் செய்தால் மாவிட்டபுர ஆலயப் பிரச்சினை மிகச் சுலபமாகத் தீர்க்கப்பட்டு விடும். இந்தக் கடமையிலிருந்து அவர்கள் நிச்சயம் தவறிவிட்டனர். அதன் மூலம் பொலிஸாரின் ''உண்மையான கடமை'' தீண்டாமை என்ற படுகேவலமான உருவத்திலும் கூட பிற்போக்குக்குச் சேவை செய்வது தான் என்பதை எடுத்துக் காட்டிவிட்டனர்.

இரு பகுதியினரதும் தலைவர்களை வீட்டுக் காவலில் வைப்பதற்குப் பொலிஸார் விரும்புவதாக இப்பொழுது ஒரு தகவல் வந்திருக்கிறது. இது, உண்மையில் வேடிக்கையான ஒரு நியாயம்தான். இது பொலிஸ் மூளையில்தான் முளைக்கக்கூடியது. சட்டத்தை மீறுபவர்களைக் கைது செய்வது புரிந்து கொள்ளக்கூடியது; ஆனல், சட்டரீதியாகத் தாம் பெற்ற உரிமையை அனுபவிக்க முன் வருபவர்களைக் கைது செய்ய முன் வருவது என்ன நீதியோ, என்ன நியாயமோ! மார்க்சிஸ - லெனினிஸ கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவர்களைப் பொலிஸார் கண்காணித்து வருவர் என்றும் ஒரு செய்தி வெளிவந்துள்ளது. இது உண்மையில் எமது கட்சிக்குக் கிடைத்துள்ள ஒரு புகழ்மாலை. ஏனென்றால், தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக சமத்துவ உரிமைகளை எமது கட்சி மட்டும்தான் உண்மையாகவும், உறுதியாகவும் ஆதரித்து வந்துள்ளது. பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் எந்தளவுக்கு அரசியல் கட்சிகளைச் சீர்குலைத்துள்ளது என்றால், எந்த ஓர் அரசியல் கட்சியும் — சிங்களவர்கள் தமிழர்களை அடக்கியொடுக்குவதற்கு எதிராகப் போராடுவதாகப் பாசாங்கு செய்கின்ற தமிழ்த் தலைவர்களும் கூட—தமிழ் மக்களின் ஒரு பகுதியினரை இன்னெரு பகுதியினர் அடக்கியொடுக்குவதை எதிர்த்து ஒரு வார்த்தையேனும் கூற முன்வரவில்லை.

அடிப்படையில் சாதிப் பிரச்சினை வர்க்கப் போராட்டத்தின் பிரச்சினை. இது பிற்போக்கு சக்திகளுக்கும் முற்போக்கு சக்திகளுக்கு மிடையில் நடக்கும்போராட்டம். முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் சிங்களவர்களாயினும் சரி, தமிழர்களாயினும் சரி, முஸ்லிம்களாயினும் சரி—அவர்கள் யார் பக்கம் நிற்கவேண்டும் என்பது ஒரு பிரச்சினையல்ல. யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்துகின்ற போராட்டத்திற்கு எமது பரிபூரண ஆதரவு நிச்சயமாக உண்டு.

## கட்சி கார்ட்டும் திரிபுவாதியும்

கெனமன் கும்பலின் யாழ் மாவட்ட செயலாளர் (இவர் ஒரு பென்சன் பொலிட்டிசன்) வீதியில் சென்று கொண்டிருந்த ஒரு வாலிபரை மறித்து—

''நீ ஏன் இன்னும் கட்சிக் கார்ட் எடுக்கவில்லை?'' என்று கேட்டார்.

''இப்பென்ன அவசரம் ஆறுதலாய் எடுக்கிறது மாஸ்ரர்'' என்றார் வாலிபர்.

இரண்டு மூன்று வரிஷமாய் எடுக்கேல்லை. கட்சிக் காங்கிரஸ் வந்தாலும் . . . . . . எப்ப எடுக்கப் போருய்? எப்ப எடுக்கப் போருய்? ஏன் காசு நெருக்கடியோ? அப்படியென்டால் நான் சரிக்கட்டிறன். ......

''இல்லை.''

''அப்ப கெதியாய் எடு?''

''வசதியான நேரம் பாப்பம். மாஸ்ரர், முந்தி கட்சிக் கார்ட் எடுக்க வேணுமெண்டால் ஒருவர் நாலைந்து வருஷமாய் விஸ்வாசமாக தீவிரமாய் வேலை செய்தாலும் அங்கத்துவக் கார்ட் எடுப்பது மிக கஷ்டம் இப்ப நீங்களே வலிய வந்து கேட்கின்றீர்கள். நினைத்த நேரம் எடுக்கலாம் தானே. கட்சி அங்கத்துவம் பெறுவது எவ்வளவு சுலபமாகி விட்டது. பிறகேன் கவலை.'' என்று வாலிபர் கூறினர்.

திரிபுவாத செயலாளரின் முகத்தில் அசடு வழிந்தது.

## சோவியத் யுத்தக்..

◎ 11-ம் பக்கத் தொடர்

வாதிகளின் பச்கத்தில் தள்ளி விடுவோம். அது எமது விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு தடையாகிவிடும். இந்த உண்மையை நாம் உணரவேண்டும். இதனை துணிந்து பிரசாரம் செய்யவேண்டும். வடக்கில் தாழ்த்தப்பட்டவராகக் கருதும் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க நாங்களும் போராட வேண்டும். அதே நேரம் மலைநாட்டு இந்திய வம்சாவழியினரின் போராட்டங்களிலும் நாங்கள் ஒன்றிணைய வேண்டும். இதன் மூலம் நாங்கள் அவர்களுக்கு அதிகமாக ஒன்றையும் அள்ளிக்கொடுக்கப் போவதில்லை. எங்களுக்கு இருக்கும் உரிமைகளைத்தான் இவர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்போகின்றேம்', என்றார்.

இதே கூட்டத்தில் பேசிய தோழர் சிறி சமரநாயகா, ''திரிபுவாதிகளும் வியட்நாம் மக்களுக்கு ஆதரவு காட்டி ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தப் போகின்றார்களாம். ஆனல் அவர்களுக்கு அதற்கு என்ன உரிமை இருக்கின்றது. சமீபத்தில் 231 அமெரிக்க ஆகாய விமான வீரர்களை சோவியத் நாடு கைது செய்தது. அவர்கள் தவறுதலாக வந்தோம் என்று கூறியதைக் கேட்டதும் ''வணக்கம்'' போய் வாருங்கள் என்று கூறி வழியனுப்பி வைத்தனர் சோவியத் திரிபுவாதிகள், ஆனல் அவர்கள் வியட்நாம் மக்களைச் சுட்டுத் தள்ள வந்து கொண்டிருந்த படுகொலைவாதிகள். இந்தக் கொலைஞர் 231 பேரை விடுதலை செய்த சோவியத் ரஷ்யாவைப் பின்பற்றும் உள்நாட்டுத் திரிபுவாதிகளுக்கு வியட்நாமுக்கு ஆதரவாகக் கூட்டம் நடத்த என்ன உரிமை இருக்கின்றது?'' என்று கேட்டார்.

மேலும் அவர் பேசும் பொழுது ''சுதந்திர கட்சி ஆட்சி வந்தால், தமது அங்கத்துவ. கார்ட்டைக் காட்டி உத்தியோகம் பெறலாம் என நினைத்துக் கொண்டு இன்று பலபேர் சிறீலங்கா சுதந்திர கட்சி அங்கத்தவர்களாக மாறுகின்றனர். அவர்களை யெல்லாம் எச்சரிக்கின்றேன். யு. என். பி. அல்ல, சிறீலங்கா சுதந்திர கட்சி என்றாலும் கூட இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது. வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிவிட முடியாது. தொழிலாளி வர்க்கத் தலைமையிலுள்ள ஆட்சியால் மட்டும்தான் அது முடியும்.

சமசமாஜ, திரிபுவாதிகள் கூட தம்மைப் புரட்சிவாதிகள் என்று கூறிக் கொள்கின்றார்கள். நான் அவர்களோடு இருபது வருட காலம் வாழ்ந்ததால் அவர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும் சமமாஜக் கட்சியில் ஏராளமான வழக்கறிஞர்கள் இருக்கின்றனர். இவர்களிடம் புரட்சி பற்றி கூறினல் இவர்கள் உடனடியாக ''சரி தோழர் நாளை மறு நாள் செய்வோமே'' என்பார்கள். சிறிது நேரம் செல்ல டயரியைப் பார்த்துவிட்டு ''தோழர் அன்றைக்கு எனக்கு வழக்கொன்றிருக்கிறது. அதற்கு மறுநாள் செய்வோமே'' என்பார்கள்.

இவர்களெல்லாம் பாராளுமன்றத்தில் கடதாசி எரிப்பது தான் புரட்சி என்கிறார்கள், பாராளுமன்றக் கூட்டத்தில் சடதாசிகளையல்ல, மலை மலையாக விறகை நிறைத்து எரித்தாலும் ஒன்றும் நடக்காது. என்றார்.

இக்கூட்டத்தில் தோழர் சண், சமன பத்திரிகை ஆசிரியர் தோழர் ஐ. ஏ. கரணகொட ஆகியோரும் பேசினர்.

தோழர் சண்ணின் பேச்சு அடுத்த வாரம் இடம் பெறும்.

## பென்ஷன் கிடைத்தது

அப்புத்தளை மாவட்ட நீட்வுட் தோட்டத்தை அதன் உரிமையாளர்களான கிப்ஸன் கம்பனியார் விற்ற போது ஆறுமுகம், வையாபுரி ஆகிய இருவருக்கும் முறையே ரூபா 426/-ம் ரூபா 34/-ம் பென்சனைக் கொடுத்திருந்தது. இன்னும் பன்னிரண்டு தொழிலாளர்களுக்குப் பென்ஷன் கொடுக்க மறுத்திருந்தது. இதற்கு எதிராக இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் (செங்கொடிச் சங்கம்) எடுத்த நடவடிக்கையின் பயனுக ஆறுமுகமும், வையாபுரியும் முறையே ரூபா 900/-ம் ரூபா 489/-ம் பெற்றனர்கள். ஏனைய பன்னிரண்டு தொழிலாளர்களும் ரூபா 6132.91 சதமும் பெற்றுர்கள்.

வாசியுங்கள்
**RED FLAG**
ஆங்கில வார ஏடு
விலை சதம் 15
விபரங்களுக்கு:-
121. யூனியன் பிளேஸ்
கொழும்பு-2

அச்சிட்டு வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி'' அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2